தொழில்சார் கல்வி

# கற்றலுக்கு ஊக்கமளித்தல்



120111

ஆசிரியர் கல்வி பாடநெறி

| | |
|---|---|
| எழுத்தாளர் | டபிள்யூ. ஜி. ஏ. த சில்வா |
| பாடப்பதிப்பாசிரியர்கள் | எச். ஜி. ஸி. ஏ. டி ஜயசேகர<br>எஸ். டீ. லயனல் அமரகுணசேகர<br>வி. ஏ. டேவிற்<br>கே. டி, நளினசேன<br>பி. எம். எல். ஆர். பண்டார<br>கே. டி. நளினசேன<br>வை. எஸ். ஏ வஹாப்<br>எம். டி. ஜே. குணத்திலகா<br>சி. புலேந்திரன்<br>தி. கனகரத்தினம்<br>சுவர்ணு நவரத்தினம்<br>வி. இராசையா |
| தளக்கோலம் | எச். மகிந்தரத்தின<br>ஏ. சிவராசா |
| மேற்பார்வை | கே. ஏ. பியதிஸ்ஸ<br>ஆர். பீ. ஏ. ஜயசேகர |
| பணிப்பு | கலாநிதி எஸ். டீ. லயனல் அமரகுணசேகர |

# கற்றலுக்கு ஊக்கமளித்தல்

தொலைக் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்

| | |
|---|---|
| தொழில்சார் கல்வி | 1201 |
| கற்றலுக்கு ஊக்கமளித்தல் | 120111 |

பொருளடக்கம் பக்கம்


0.0 அறிமுகம் ............ 3
1.0 குறிக்கோள்கள் ............ 4
2.0 முற்சோதனை ............ 5

பகுதி I

3.0 ஊக்கமளித்தல் என்றால் என்ன? ............ 6

பகுதி II

4.0 ஊக்கமளிக்கும் நுட்ப முறைகள் ............ 11

பகுதி III

5.0 ஊக்கமளித்தல் பற்றிய கொள்கைகள் ............ 32

பகுதி IV

6.0 ஊக்கமளித்தலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் ............ 47
7.0 சுருக்கம் ............ 54
8.0 பிற்சோதனை ............ 55
9.0 ஒப்படை ............ 57
10.0 விடைகள் ............ 57
11.0 மேலதிக வாசிப்பு ............ 59



© 1991 தேசிய கல்வி நிறுவகம்.



முதற் பதிப்பு 1 : 2

## 0.0 அறிமுகம்

கற்றலுக்கு ஊக்கமளித்தல் என்ற இம் மொடியூலைக் கற்பதற்கு ஆரம்பமாகும் நீங்கள் கல்வி உளவியல் சம்பந்தமாக பல மொடியூல்களை நன்ருகக் கற்றுள்ளீர்கள். குழந்தைக் கல்விக்கான நுட்பமுறைகள், குழந்தைகளின் உடல் வளர்ச்சி, சமுதாய வளர்ச்சி, நுண்ணறிவு வளர்ச்சி, மனவெழுச்சி வளர்ச்சி, பரம்பரையும் சூழலும், விசேட உதவிகள் தேவைப்படும் பிள்ளைகள் என்பவைகளே அம் மொடியூல்களாகும்.

கற்றலுக்கு ஊக்கமளித்தல் பற்றி நன்கு விளங்கிக் கொள்வதற்கு ஊக்கமளிக்கப்படும் பிள்ளையின் நடத்தை இயல்புகளை நன்கு அறிந்திருக்க வேண்டும்.

கற்றலை நன்கு ஆராய்ந்து புார்க்கும் போது எல்லா உயிரினங்களிலும் பார்க்க மனித வர்க்கம் தான் அதிக கற்கும் ஆற்றலைக் கொண்டது என நாம் தீர்மானிக்க முடியும். அதேபோன்றே மனிதனை ஏனைய உயிரினங்களிலிருந்து பிரித்துக் காட்டும் ஒரு பிரதான காரணியாகவும் கற்றல் இருக்கின்றது.

கற்றல் என்பது தனிப்பட்டவர்களது நடத்தையில் ஏற்படும் ஒரு மாற்றமாகும். இதற்கு முன் உள்ள மொடியூல்களில் பிள்ளைகளின் கற்றல் இயல்புகளைக் கண்டறிந்த நீங்கள் கற்றல் அல்லது நடத்தை மாற்றம் இலகுவாக நடைபெறும் என எப்படியும் நம்ப மாட்டீர்கள். அக்கற்றலுக்காக எதோ ஒரு வகையில் ஊக்கமளித்தல் வேண்டும் என்பதை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

வகுப்பில் ஆசிரியர் கற்பிக்கும் சகலவற்றையும் எல்லா மாணவர்களும் விருப்புடனும் ஆர்வத்துடனும் ஒரே அளவில் கற்றுக் கொள்ளமாட்டார்கள். என்பதை அனுபவத்தினுடாக நீங்கள் அறிந்திருப்பீர்கள் சில பிள்ளைகள் பாடசாலை மீது ஆசிரியர் மீதும் உள்ள விருப்பத்தினுல் கற்றலும் பெரும்பாலானேர் அவ்வாறு இலகுவாக சுயவிருப்புடன் கற்பதில் நாட்டம் கொள்வதில்லை. பெற்ருேர்களின் வற்புறுத்தலுக்கும் தண்டனைக்கும் பயந்து பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளும் இருப்பார்கள். அவர்கள் கற்றல் செயற்பாடுகளில் அதிக கவனம் எடுக்காமல் குழுக்களாக இருப்பர் இதன்படி வகுப்பறையினுள் ஆர்வத்துடன் கற்கும் பிள்ளைகளுடன் கற்றலில் பின் தங்கிய மெல்லக் கற்கும்

பிள்ளைகளும் இருப்பார்கள். அவ்வாறான பல்வேறு நடத்தை இயல்புகளைக் கொண்ட ஒரு மாணவர் குழுவினரை கல்விச் செயல்களில் ஊக்குவித்தல், அவதானிக்கச் செய்தல், கற்றலைத் தொடர்ச்சியாக வழிநடாத்திச் செல்லுதல் போன்றவைகள் ஆசிரியர் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் முக்கியத்துவம் வகிக்கின்றன. இப்பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு இம் மொடியூல் உங்களுக்கு உதவியாக இருக்கும் கல்வி உளவியலில் கற்றலுக்கு ஊக்கமளித்தல் என்ற முக்கிய தலைப்பாகிய இது இலகுவாகக் கற்பதற்குப் பகுதிகளாக்கப்பட்டு பின் விளக்கத்தை படிமுறையாகவும் இலகுவாகப் பெற்றுக் கொள்ளும் முறையில் சோதனைகளையும் செவ்வை பார்த்தல்களையும் உள்ளடக்கியதாகவும் எடுத்துச் கூறப்பட்டுள்ளது. இதனை நுணுக்கமாகக் கற்று சிறந்த ஓர் ஆசிரியர் ஆவதற்கு உறுதி கொள்ளுங்கள்.

## 1.0 குறிக்கோள்கள்

இம்மொடியூலைக் கற்பதனால் கீழ்வரும் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

★ ஊக்கமளித்தல் என்றால் என்ன என்பதை விளக்கிக் கொள்ளுதல்

★ கல்விச் செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்க வேண்டியதின் முக்கியத்தை அறிந்து கொள்ளல்

★ ஊக்கமளித்தல் பற்றிய பல்வேறு கல்வி உளவியலாளரின் கொள்கைகளை விளங்கிக் கொள்ளல்

★ ஊக்கமளித்தலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை என விளங்கிக் கொள்ளல்

★ மாணவர்களை ஊக்குவித்தலின் அவசியம் பற்றி ஆசிரியர் கொண்டிருக்க வேண்டிய மனப்பாங்குகளை வளர்த்துக் கொள்ளல்

★ வகுப்பறையில் ஆசிரியர் உபயோகிக்கக் கூடிய ஊக்கமளிக்கும் நுட்பமுறைகளில் திறமைகளை விருத்திசெய்து கொள்ளல்.

## 2.0 முற்சோதனை

கீழே காணப்படும் வினுக்களுக்கு தரப்பட்டுள்ள விடைகளில் மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

1. வகுப்பறையை ஒழுங்குபடுத்திக் கொள்வதில் மிகக் கவனம் செலுத்தவேண்டியிருப்பது..

 i கரும்பலகை வைக்கப்படும் இடத்தைப் பற்றியதாகும்.

 ii கதிரை, மேசை போன்றவைகளை ஒழுங்குபடுத்திக் கொள்வதிலேயாகும்.

 iii சுவரில் தொங்கவிடப்பட்டுள்ள படத்தைப் பற்றியதாகும்.

 iv மாணவரின் உள்ளத்தைத் துண்டும் விதத்தில் ஒரு சூழலை அமைத்துக் கொள்வது பற்றியதாகும்.

2. வகுப்பறையில் ஒரு ஆசிரியர் சர்வாதிகாரியாகத் தொழிற்பட்டால்.

 i மாணவர்களிடையே ஒரு சிறந்த ஒழுங்கு ஏற்படும்.

 ii மாணவரின் ஆக்கச் சிந்தனை தடைப்படும்.

 iii ஆசிரிய - மாணவர் தொடர்பு சிறப்புற்று அமையும்

 iv ஆசிரியரின் கட்டளைக்குப் பணிந்து தொழிற்படும் மாணவர் உதயமாவர்.

3. ஒரு முறை ஆசிரியரிடம் தண்டனை பெற்ற மாணவன் மீண்டும் தண்டனை பெற விருப்பமின்மையால் தினசரி வீட்டு வேலைகளைச் செய்து வருவான். இங்கு இவன் செயற்படுவது.

 i அவன் திறமை பெற்றுக்கொள்ளும் தேவையினுல்

 ii உள்ளார்ந்த துண்டுதலினுல்

 iii வெளிப்புறத் துண்டுதலினுல்

 iv சுயநலத்தினுல்.

> முற்சோதனைக்குரிய விடைகள் மொடியூலின் இறுதியில் தரப்பட்டுள. உங்களது விடைகளை அதனுடன் ஒப்பிட்டுப்பாருங்கள்.

**முற்சோதனையைச் திருப்தியாக செய்து முடித்த நீங்கள் ஊக்கமளித்தல் என்றுல் என்ன என்பதில் உங்களது கவனத்தைச் செலுத்துங்கள்.**

## 3.0 ஊக்கமளித்தல் என்றல் என்ன?

கற்றலுக்காக உடல், உள ஆயத்தம் அவசியமான தென்பதை உளவியலாளர் ஏற்றுக் கொள்கின்றார்கள். இவ் ஆயத்தினுடாக மாணவர்கள் கற்றல் செயற் பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபடுவது அவன் பெறும் ஊக்குவித்தலிலே தங்கியுள்ளது.

கற்றலைப்போல ஊக்கமளித்தலின் இயல்பினை அறிந்து கொள்ளுதல் மிகவும் கஸ்டமானதொன்றாகும். அவ் வாறு வெளிப்படையாகக் அவனிடம் காணப்படும் அறிகுறிகளினாலேயே அதனை அறிந்து கொள்ள முடியும் இவ் ஊக்கமளித்தலை அகஊக்கிகள், புறஊக்கிகள் என இரண்டாகப் பிரிக்கலாம். புறஊக்கிகள் மூலம் ஒரு வரின் உளள்ளார்ந்த சக்திகளை விருத்தி செய்ய முடியும் பாடசாலையின் கற்பித்தலின் பெரும் பகுதி உள்ளத் தினை வழிநடத்துவதற்கு மேற்கொள்ளப் படும் செயலாகும். அதேபோல கற்றலும் கற்பவரின் உள்ளத் தினை வழி நடத்துவதன் பெரும்பங்காக தொழிற் படு வதனால் ஊக்கமளித்தல் அவசியமாகின்றது.

உங்களது வகுப்பில் கற்கும் நீர்மலன் குறும்புத்தன மாணவன் ஆனால் அவனது சிறந்த நடத்தையின் காரண மாக உங்களால் புகழப்பட்ட சந்தர்ப்பங்களில் அவன் பெரும் மகிழ்ச்சியடைந்தான் என்பது உங்களுக்கு ஞாபகமிருக்கின்றதா? வருட இறுதியில் நிர்மலனின் கல்விச் செயற்பாடுகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தைப் பற்றி நீங்கள் ஆச்சரியமடைந்தது ஞாபகமிருக்கின் றதா? புகழ்ச்சியினுடாக வழங்கிய புற ஊக்கிகள் உள் ளார்ந்தசக்தி விருத்தியடைவதற்குச் செல்வாக்குச் செலுத்திக் கொண்டது இதனால் தெளிவாகின்றது.

மாணவர்களிடையே இல் உள்ளார்ந்த தேவைகளை அல்லது ஆர்வத்தை வெளிக்கொணர்தலே ஆசிரியரின் பணியாகும். உளவியாலாளர் ஊக்குவித்தல் மூலமும் இதனையே கருதுகின்றார்கள். ஏதாவது ஒரு செயலினைச் செய்ய வேண்டிய சக்தியைப் பெற்றுக் கொடுக்க ஊக் கல் அவசியமானது. மனிதனுக்கு மட்டும்தானா? பண் டைக்காலம் முதல் அவ்வாறில்லை என்பதை மனிதன் அறிந்திருந்தான் பசியினால் வாடும் ஒரு மிருகம் உண வைத்தேடி ஓடத்தூண்டப்படும் தண்ணீர்தாகமுள்ள ஒருவர் நீரைத்தேடிச் செல்வார்.

பசிக்கும் உண்பதிற்கும் இடையிலுள்ள தொடர்பு யாது? பசி சாப்பிடுவதற்கு ஊக்கமளிக்கும். தண்ணீர்த் தாகம் நீரைத் தேடிச் செல்ல ஒரு ஊக்கத்தைத் அளிக்கும். இவ்வாறு பசியினைப் பூர்த்தி செய்யவேண்டிய தேவை தாகத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டிய தேவை போன்ற தேவைகளை உளவியலாளர்கள் உந்தல் என்ற சொல்லைப் பாவிக்கின்றூர்கள். எங்களது பெரும் பாலான நடத்தைகளுக்கும் ஊக்கங்களுக்கும் இவ்வாறன உந்தல்கள் இருக்கின்றன என உளவியலாளர்கள். கண்டு அறிந்துள்ளார்கள் அதனலேயே ஊக்கல்களுக்கு உளவியலில் உந்தல்கள், தூண்டல்கள் என்ற சொற்களும் பாவிக்கப்படுகின்றன.

நாம் செய்யும் சகல செயல்களும் ஊக்கலினுல் தான் செயற்படுகின்றன எனக் கூறுவது பிழையானது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். கண் எதிரே கைவிரலை நீட்டும்போது கண் மூடுதல் போன்ற எதிர்த்தாக்கச்செயல்கள் ஊக்கல்கள் மூலம் தொழிற்படும் செயற்படுவதாக அழைக்க முடியாது.

ஊக்கலில் செல்வாக்குச் செலுத்தும் உந்தல்கள் இரு வகைப்படும்.

- **ஆரம்ப உந்தல்கள்**
- **இடைநிலை உந்தல்கள் அல்லது எண்ணங்கள்.**

உடலில் ஏற்படும் இரசாயனத் தொழிற்பாட்டின் காரணமாக உருவாகுவது ஆரம்ப உந்தல்களாகும் இது கற்பதினுல் உருவாகாது ஆனல் இடைநிலை உந்தல்கள் உடல் இரசாயனத் தொழிற்பாட்டுடன் நேரடித் தொடர்பு கொண்டதல்ல.

பசி, தாகம், பால் உணர்வு புலன் உணர்வு ஆகியன ஆரம்ப உந்தல்களுக்கு உதாரணங்களாகும்.

பயம், சமூதாயத்தேவைகள் திருப்தி ஆகியன இடைநிலை உந்தல்களுக்கு உதாரணங்களாகும். இவ்விரு துறைகளும் கற்றலுக்கு ஊக்குவித்தலில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

ஆரம்ப உந்தல்களின்படி தேவையின் நிமிர்த்தம் உருவாகி தூண்டப்பட்ட நடத்தைகளின் காரணமாக ஒரு ஊக்கலைத் தோற்றுவிக்கும் முறையான கல்வியினுல் ஆரம்ப உந்தல்கள் காரணமாக தேவை ஏற்படும் வரை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஆதலால் ஆசிரியரின் பணி இடைநிலை உந்தல்களினூடாக தேவைகளைத் தோற்றுவித்து மாணவர்களின் கல்விச் செயல்களுக்கான அவகாசத்தையும் சந்தர்ப்பத்தையும் பெற்றுக் கொடுக்கவேண்டும்.

ஒரு மாணவனின் ஒரு நடத்தைக்காண ஊக்கலே சில உந்தல்களும் எண்ணங்களும் தீர்மானிக்கின்ற சந்தர்ப் பங்களும் இருக்கின்றன. ஒரு மாணவனின் பாடசாலே வரவு பெற்றோர்களைத் திருப்திப்படுத்துதல், கற்றல், நண்பர்களைச் சந்தித்தல் போன்ற சில உந்தல்களினுல் தீர்மானிக்கப்படுகின்றது. இதனை ஓர் உதாரணமாக நாம் எடுத்துக் கொள்ளலாம்.

ஒரு உந்தலினுல் பல ஊக்கல்கள் வெளிப்படக்கூடும். தனிப்பட்ட ஒருவரிடம் வெற்றி பெறுவதற்கான எண்ணம், பரீட்சையில் கஷ்டப்பட்டுத் தோற்றுதல் உற்சாகத்துடன் விளையாட்டுக்களில் ஈடுபடுதல், தொழிலேயும் தனது சொந்த வேலேகளையும் நன்ருக நிறை வேற்றுதல் போன்ற பல்வேறு செயல்கள் மூலம் பல ஊக்கல்கள் வெளிப்படக்கூடியதாக இருக்கும்.

உந்தலின் சக்தியே ஊக்கலினதும், நடத்தையினதும் தன்மையைத் தீர்மாணிக்கின்றது. பசியினுல் வாடும் ஒருவன் நீரைத் தேடாது உணவையே தேடுவான். தாக முள்ள ஒருவன் உணவைத்தேடாது நீரையே தேடுவான் வேறு ஒருவிதமாகவே புதுமை நாட்டமுள்ள ஒருவர் தொழிற்படுவான். அவன் புதுமை நாட்டத்தைத் தீர்த் துக் கொள்ள வழிதேடுவான்.

தாம் ஈடுபடும் ஒரு செயலில் நாட்டம், அவா, கவனம், ஆகியன ஏற்படாவிட்டால் கற்றலேச் சரியான முறை யில் நிறைவேற்றுக் கொள்ளமுடியாது. இதனுல் உள வியலாளர்கள் கற்றலில் ஈடுபடுத்தும் ஊக்களைக் கண்ட றிய மிக நீண்ட பரிசோதனைகளைச் செய்துள்ளனர். இப் பரிசோதனைகளில் விளைவாக ஊக்கல்கொள்கைகளும், ஊக்கல் நுட்பமுறைகளும் தோன்றியுள்ளன. அதனுல் உளவியல்துறையில் ஊக்கலுக்கு மிக முக்கிய இடம் வழங்கப்படுகின்றது. அதனுலேயே மிச்சிக்கண் பல்கலேக் கழக உளவியல் துறைப் பேராசிரியரான மெருஹரான் ஜே. தொம்சன் என்பவர்'' கற்றலுக்கு மிக உன்னத வழி ஊக்கல்'' ஆகும் என்ருர்.

ஊக்கல் என்ருல் என்ன என்பதை விளங்கிக் கொள்ள அடிப்படையிலே ஊக்கலில் இரு வேறுபாடுகள் உண் டெண்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

- மானிட ஊக்கங்கள்
- கற்றலுக்கான ஊக்கங்கள்.

உயிரினங்களின் ஊக்கல்களுக்கு உதவியாகவும், உள, உடல் தேவைகளின் உந்தல்கள் உடலில் இரசாயனத்

தொழிற்பாடுகள், நரம்புத்தொகுதியினதும், மூளையினதும் செயற்பாடுகள் போன்ற விடயங்களின் தன்னைப் பற்றி விசேடமாக மானிட ஊக்கங்களில் ஆராயப் படுகின்றது.

உளவியலில் கல்வி உளவியல் என்ற பிரிவு உருவாகியமையால் கற்றலுக்கான ஊக்கல்களை வேறாகப் பிரித் தாராய வேண்டியுள்ளது. அதில் மானிட உந்தல்கள் சிந்தனைகள் என்பவற்றுடன் ஊக்கலுக்குச் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளும், கற்றலுக்கான ஊக்கல் நுட்பமுறைகளும் ஆராயப்படுகின்றன ஆதலால் வகுப்பறையில் சோம்பல் தாழ்வுச்சிக்கல், பின்தங்கிய மெல்லக்கற்கும் மாணவர்களைப் பற்றி மட்டுமல்லாமல் பல்வேறு செயல்களையும் சிரமத்துடன் முடிக்கும் தடைகளுக்கு மத்தியில் தளராது மாணவர்களை மேலும் ஊக்குவிக்கும் முறைகளைப் பற்றியும் கல்வி உளவியல் கவனம் செலுத்துகின்றது.

கற்றலுக்கு ஊக்கமளித்தல் பற்றி பிரபல்யம் வாய்ந்த உளவியலாளர் சிலர் எடுத்துக்கூறியுள்ள கருத்துக்களை நாம் இப்பொழுது உங்களுக்கு வழங்குகிறோம்.

''கற்றலுக்குக் கட்டாயமாக உயிரிகளை ஊக்குவிக்க வேண்டும்''

- மக் கொணெல்

''கற்றலை இடைநிறுத்தாது தொடர்ந்து கற்பதற்கு சிறந்த வழி ஊக்கலேயாகும்''

– அன்டர்ஸன்

''மிகச்சிறந்த கற்றலுக்கு அத்தியாவசியமக அமைவது ஊக்கலேயாகும்''

– மில்டன்

''கல்வி உளவியலிலும் வகுப்பறைக் கற்பித்தலிலும் மிக முக்கிய பிரச்சினையாக இருப்பது ஊக்கல் பற்றிய பிரச்சினைகளேயாகும்''

- ஹரிஸ்

''சுதந்திரமான ஒரு சமுதாயத்தில் மிக முக்கியமான கல்வி வேலைத்திட்டத்தின் உயிர் நாடியாக அமைவது ஊக்கல் பற்றிய பிரச்சினையாகும். அது கற்றலின் கடின தாக்கத்தை ஏற்படுத்தும் அதேபோல் கற்றலிலே சுறுசுறுப்பைக் பெற்றுக்கொடுக்கும் தூண்டுதலாகவும் இருக்கும்.

– கேட்ஸ்

''கற்றல் செயற்பாடுகளைத் திருப்தியாக நிர்வகிக்கும் காரணியாக ஊக்கல் விளங்குகின்றது''

பேர்னுட்

''உயிரினங்கள் ஊக்கலடைவதற்கு காரணமான எண்ணங்கள் எல்லாம் கற்றலினுல் பெற்றுக்கொள்ளப் பட்டவையாகும்''

- மக் லேலண்ட்

ஊக்கல் என்றுல் என்ன என்பதற்குத் ஏகமனதான வரைவிலக்கணத்தை உளவியலாளர் முன்வைக்கவில்லை எனினும் பின்வருமாறு அவர்களது கருத்துக்களை எடுத்துக் கூறலாம்.

''ஒரு தனி நபரிடம் ஏதோ ஒரு செயற்பாட்டிற்காவுள்ள ஒரு சாதாரணமான சக்தியை (உந்தல்கள், எண்ணங்கள்) மலரச் செய்து, அதன் மூலம் விசேட சக்தியை உருவாக்குவதே ஊக்கலாகும்''

**செவ்வைபார்த்தல் 1**

கீழ்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரியென்றும் (√) பிழையாயின் பிழை (×) என்றும் அடையாளமிடுக.

1. கற்றலுக்கு ஊக்குவித்தல் பற்றி ஒரு விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு பிள்ளையின் நடத்தைப் போக்குகளை அறிந்திருக்கவேண்டும். ..........................
2. பெரும்பாலான பிள்ளைகள் ஆசிரியரின் விருப்பிற்கேற்கக் கற்கின்ருர்கள் ..........................
3. ஊக்கல் என்பது உள்ளார்ந்த வெளியார்ந்த செயற்பாடாகும் ..............................
4. சகலரிடமும் கற்றலுக்கு ஒரு சாதாரண உந்தல் காணப்படுகின்றது: ..........................
5. புலன் உணர்ச்சி என்பது ஊக்கலுக்குப் பாவிக்கப்படும் இன்னெரு பெயராகும் ....................
6. தாகம் இடைநிலை உந்தலால் ஏற்படுவது ........

7. சில வேளை ஊக்கல் சில எண்ணங்களாலும் சில உந்தல்களினுலும் தீர்மாணிக்கப்படுகின்றன.

..............................

8. ஊக்கலின் திசையைத் தீர்மானிப்பது உந்தலின் சக்தியினுலேயாகும்.........................

9. ''கற்றலுக்கான மிக உன்னதவழி ஊக்கலாகும் என்று எடுத்துக்கூறியவர் மக்லேலண்ட் என்னும் ஆய்வு உளவியலாளராவர்:..............................

உங்களது விடைகளை மொடியூலின் இறுதிலிலுள்ள விடைகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

10. கற்றலை இடை நிறுத்தாது தொடர்வதற்கு மிகச் சிறந்த வழி ஊக்கலாகும்... ........................

ஊக்கல் கற்றலுக்கான ஊக்கல் என்பவைகளைப் பற்றி நீங்கள் அறிந்து கொண்டுள்ளீர்கள் நாங்கள் இப்போது கற்றலுக்கு ஊக்குவிக்கும் நுட்பமுறைகளைப் பற்றிக் கற்போம்.

பகுதி **11**

## 4. 0 ஊக்கமளித்தலுக்கான நுட்டமுறைகள்

செயற்பாடு 1

1. 8ம் வகுப்பில் இரு சமாந்தரப்பிரிவுகளை எடுங்கள் அவ்வாறில்லையெனில் வகுப்பினை இரண்டாகப் பிரியுங்கள். (திறமையடிப்படையில் மாணவர்கள் பிரிக்கப் பட்டிருந்தால், அவர்களின் எல்லோரையும் ஒன்ருக்கி, எழுந்தமான முறையில் இரண்டாகப் பிரியுங்கள்) அதன் பின்பு இவ் இரு பிரிவுகளுக்கு சமுகக் கல்வி, விஞ்ஞானம் போன்ற பாடங்களில் ஒன்றை வெவ்வேருக கற்பியுங்கள். கற்பிக்கப்பட்ட பாடம் தொடர் பான விஞப்பத்திரத்தை ஒரு குழுவிற்கு வழங்குங்கள்.

இரண்டாவது பிரிவை மேலும் இரு உப பிரிவுகளாகப் பிரித்து கற்பித்த பாடத்தில் அளவினை அளவிடப் போட்டி ஒன்று நடாத்துங்கள். இறுதியில் இரு உப பிரிவுகளின் பாடப் பிரயோகத்திற்குச் செலவழித்த நேரம்' உற்சாகம், விளைவுகள், எடுத்துக் கூறிய விதம் ஒத்துழைப்பு, போன்ற விடயங்களை வெவ்வேருக ஒப்பிட்டுப் பாருங்கள்.

2. விளையாட்டு மைதானத்தில் தனி நிகழ்ச்சிப் போட்டிகளையும் குழு முயற்சிப் போட்டிகளையும் அவதானியுங்கள். இங்கே இரு குழுக்களும் காட்டும் ஈடுபாடு, விளையாட்டிலிருக்கும் உற்சாகம், குழு முயற்சி போன்ற விடயங்களை அளவிட்டுப் பாருங்கள். மேலே கூறிய செயற்பாட்டினூடாகப் பிள்ளைகளை ஊக்குவித்தலுக்குப் பொருத்தமான சில ஊக்கல் முறைகளை நீங்கள் அனுபவமூலம் அறிந்திருப்பீர்கள். மேலும் அவ்வாறான நுட்பமுறைகள் சிலவற்றை இறுதியில் குறிப்பிடுவோம். அவைகளை வகுப்பறையிலே உபயோகப்படுத்திக் கொள்ள முயலுங்கள்

ஊக்கல் நுட்பமுறைகளில் ஒன்றான புகழ்ச்சி என்பதில் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள்.

புகழ்ச்சி

சிறந்த கற்றல் நிலை ஒன்றினைப் பெற்றுக்கொள்ள சிறந்த ஊக்கல் முறையாகப் புகழ்ச்சி கருதப்படுகின்றது. செய்து முடிக்கப்பட்ட ஒரு வேலையைப் புகழ்வது அல்லது உதவி செய்வதினால் இச் செயலைத் தொடர்ந்து செல்வற்கு விருத்தி செய்து கொள்வதற்கும் முடியும் என்பது உளவியல் ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

பிள்ளைகள் செய்யும் வேலைகளைப் புகழ்ந்து கூறும் போது சுயகௌரவம் பற்றிய விருப்பு தொழிற்படுவதினாலேயே மற்றவர்களிலும் பார்க்க நன்றாக ஒரு வேலையைச் செய்து முடிப்பர்.

கற்றலுக்கு ஊக்குவிக்கும் ஒரு முறையாக புகழ்ச்சியைப் பாவித்துக் கொள்ளும் விதத்தினை ஆசிரியர்கள் நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும். ஏதேனும் ஒரு செயலுக்கு புகழ்தலும் உதவுதலும் சில முறைகளால் செய்ய முடியும். நன்றி செலுத்துதல், ஏற்றுக் கொள்ளுதல் பரிசு வழங்குதல், மிக நன்று என்று கூறுதல் ஆகியவை மூலம் இதனைச் செய்யலாம்.

உதாரணமாக உதவியும், தைரியமும் கொடுக்கவேண்டிய மாணவனைப் பார்த்து, அவனது ஒரு செயலோ அல்லது முக்கிய கருத்தினை எடுத்துக் கூறும் போது

''குணசேனன், நீர் தற்போது ஒரு முக்கிய விடயத்தை எடுத்துக் கூறினாய் அதைப்போல எல்லா நேரங்களிலும் புதிய கருத்துக்களை எடுத்துக் கூற முயற்சிக்க வேண்டும். மற்றப்பிள்ளைகளும் குணசேனனைப்போல புதிய கருத்துக்களை எடுத்துக் கூறப்பழகிக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவனது சிந்தனைச் சக்தியை விருத்தி செய்ய உதவி செய்ய முடியும். அவன் மற்ற மாணவர்களுக்கு முன்மாதிரியாக இருப்பான்.

அதைரியமாக வெட்கப்படுகின்ற ஒரு பிள்ளைக்கு அவன் செய்த ஒரு வேலையை அல்லது வரைந்த சித்திரத்தைப் பற்றி புகழ்ந்தால், அவனின் கற்கும் நிலையை விருத்தி செய்து கொள்ள முடியும்.

புகழ்பவருக்கும் புகழப்படுபவருக்கும் இடையிலுள்ள தொடர்பினாலேதான் கற்றலுக்கு ஊக்கமளித்தலில் புகழ்ச்சியானது எவ்வளவு தூரம் செல்வாக்குச் செலுத்துகின்றதென்பது தீர்மானிக்கப்படுகின்றது. புகழ்ச்சி வழங்கப்படுவது தன்னைப்பற்றி அன்பும், ஆதரவும் விருப்பும் உள்ள ஒருவராக இருக்க வேண்டும். அதே போன்று சிறந்த முன்னேற்றத்திற்கு விருப்பும் நம்பிக்கையும் நல்லெண்ணமுமுள்ள ஒருவராக இருந்தால் அதனால் பெறும் விளைவுகள் மிக விசாலமானதாகும் அவ்வாறு நோக்கும்போது மாணவர்களைப் புகழ்வதற்கு மிகப் பொருத்தமானவரும் ஆசிரியராவர்.

புகழ்ச்சியானது சாதாரண மட்டத்திலுள்ள பிள்ளைகளைப் போல குறைபாடுள்ள பின்தங்கிய பிள்ளைகளுக்கும் மிகவும் யோக்கியமான ஒரு ஊக்குவிப்பு முறையாகும்.


புகழ்ச்சி எல்லா மாணவர்களிடையேயும் சமமான தாக்கத்தை ஏற்படுத்துவது சில வேளை எல்லாத் தவணைகளிலும் வகுப்பில் முதலாவது இடத்தைப் பெற்றுக்கொள்ளும் எப்பொழுதும் ஆசிரியரின் புகழ்ச்சியைப் பெறும் ஒரு மாணவன் அதற்கு எவ்வளவுதூரம் பழக்கப்பட்டிருக்கிறார் என்பதையும் சிலவேளை புகழ்வதன் மூலம் அவனிடம் எவ்விதமான கற்றல் ஊக்குவிப்புக்களும் ஏற்படாதிருக்கவும் முடியும் அதேபோன்று அளவுக்கதிகமான புகழப்படுவதினால் அளவுக்கதிகமாக பெருமைப் பட்டுக்கொண்டும், அளவுக்கதிகமாக தன்னம்பிக்கை ஏற்படுத்திக்கொண்டும் பாடசாலை வேலைகளில் முன்பு ஈடுபட்ட அளவாவது உற்சாகம் காட்டாத சந்தர்ப்பங்களும் உண்டு என்பதை நாம் கவனத்திற்கெடுத்துக் கொள்ளவேண்டும்.

வீட்டிலே புறக்கணிக்கப்பட்டு தனக்காதரவு அளிக்க ஒருவரும் இல்லையென்ற உணர்வோடு காணப்படும் பிள்ளைகளை ஊக்குவித்தலுக்காகப் புகழ்ச்சி மிகப் பொருத்தமானதாகும். அவர்களுக்கு தம்மைப்பற்றி நம்பிக்கை வைத்துள்ள தாம் தைரியம் கொள்ளும் சகல சந்தர்ப்பங்களிலும் உற்சாகம் பெறுவதற்கு உதவியளித்துத் தூண்டும் ஒரு ஆசிரியர் நிலையான நம்பிக்கையே அவர்களுக்குத் தேவையாகும்.

புகழ்ச்சி கற்றலுக்கு ஊக்கமளிக்கும் விதத்தினைப்பற்றி ஐ. ஜோஹன்னஸ்ஸன் செய்த ஆய்வின் விளைவுகள் பின்வருமாறு 10-11 வயது வரையுள்ள பிள்ளைகளின் எண் கணிதம் கற்றலில் ஆவல் அதிகமுள்ள பிள்ளைகளுக்கும் சுய நம்பிக்கை குறைந்தவர்களுக்கும் ஆசிரியர் மீது எதிரான மனப்பாங்கு உள்ளவர்களுக்கும் ஆசிரியரின் புகழ்ச்சி மிகச் சிறந்த ஊக்கல் முறையாகும். ஆனல் ஒரு பிரச்சினையைத் தீர்க்கும் முறையை அறியாதிருந்தால் எவ்வளவு புகழ்ந்து கூறினும் அப்பிரச்சினையை விடுவிக்க முடியாது.

ஊக்குவிக்கும் நுட்பமுறையாக புகழ்ச்சியைப் பற்றிக் கற்ற நீங்கள் இப்போது மற்றுமொரு நுட்பமுறையான குறை கூறுதல் என்பதில் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள்.

### குறைகூறல்



திறமை, நுண்ணறிவு கூடிய மீத்திறன் பிள்ளைகளுக்கு மட்டுமே நடுநிலையாக இருந்து குறைகூறுதலும் எச்சரித்தலும் கற்றலுக்கு ஊக்கமளிக்கும் ஒரு நிறையாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். இதன்மூலம் தவறுதலாக விடப்பட்ட அல்லது மறந்துபோன ஒரு செயலை மீண்டும் நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்று தெரிய வந்துள்ளது. குறைகூறல் என்பது இகழ்வதாக அமையாது இகழ்வதினல் வெட்கமும், உளத்தாக்கமும் ஏற்படக்கூடும். மறுபுறமாக நோக்கும்போது அடிக்கடி ஆசிரியரின் குறைகூறலுக்கு இலக்காகும் வேளையில் திறனுள்ள மாணவனுக்கு அவ்வாறு குறைகூறல் பொருளற்ற செயலாகிவிடும்.

ஆதலால் இக்குறைகூறுதலை குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவதாக கருதுதல் மிகவும் பொருத்தமாகும். அவ்வாறு ஒரு வகுப்பறையில் ஆசிரியர் உபயோகித்துக் கொள்ளும் ஒரு சந்தர்ப்பத்தைப் பற்றி ஒரு உதாரணத்துடன் கீழே தருகின்றோம்.

எழுதுவதிலும், வாசிப்பதிலும் குறைபாடுள்ள ஊக்கல் அவசியம் எனக் கருதும் மாணவர்களுக்கு குறைபாடுகளைப் பற்றி சுருக்கமான ஓர் அறிவுறுத்தலை எழுதி வழங்கமுடியும்.

''சிறிசேனன் நீ வாசிப்பது போதியதாக இல்லை நீ அதிகமாகப் புத்தகங்கள் வாசிக்கவேண்டும். வாசிப்பதனைப்பற்றி இதிலும் பார்க்க விளக்கமான குறிப்புகளை எழுதவேண்டும்.

''லதா உனது குறிப்புப் புத்தகம் மிகவும் ஒழுங்கற்றிருக்கின்றது அதிலிருந்து உனது மனதில் சிக்கல்கள் இருப்பதையும் வேலையில் உற்சாகம் இல்லாதிருப்பதும் எனக்கு விளங்குகிறது. வேலைசெய்ய முடியாத கஸ்டங்கள் இருந்தால் அதைப்பற்றி என்னிடம் கூறு''

இவ்வாறான அறிவுறுத்தல்கள் இகழ்வது கேலிசெய்வது என்பவைகளிலும் பார்க்க பயனுள்ளதாக இருக்கக் கூடும். அதில் மாணவர்களின் அறிவு மட்டத்தை விளங்கப்படுத்தி, அதுபற்றி அவனின் சொந்த அவதானத்தை ஈடுபடுத்த முடியும்.

குறை கூறுவதை மாணவர்களை ஊக்குவிக்கும் ஒரு முறையாக கொள்ளும் போது குறை கூறுவதனை எவ்வாறு செய்கிறோம் என்பதனைப் பொறுத்தே அமைவதால் ஆசிரியரிடம் காணப்படும் பண்புகள் மற்றவைகளிலும் பார்க முக்கியமானவையாகும். மற்றவர்களை இகழ்வதன் மூலம் ஒரு சிறு திருப்தியை பெற்றுக் கொள்வது ஒரு உள நோயாகும். அது நல்லாசிரியனுக்குப் பொருத்தமான பண்பாக அமையமாட்டாது. ஆதலால் குறை கூறுதல் மாணவர்களின் குறைபாடுகளை நீக்கிக் கொள்வதற்காகச் செய்யும் ஒரு முன்னேற்றகாரமான விவர்சனமாக இருக்க வேண்டும். அவ்வாறான குறைபாடுகளை விமர்சிப்பதை கற்றுக் கொள்ள மாணவர்கள் பின்னிற்கமாட்டார்கள்.

அதிகமான உளவியல் ஆய்வுகளுக்கேற்ப ஊக்குவிக்கும் ஒரு நுட்பமுறையாக குறை கூறுதலுக்கு புகழும் முறையிலும் பார்க்கக் குறைந்த இடமே கிடைக்கின்றது. இதுபற்றி ஒரு ஆய்வினை மேற்கொண்ட ரி. எச். பறிஜ்ஸ் என்பவர் இவ்வாறு கூறுகின்றார்.

ஜாடையாகக் சொல்லுதல், இழிவுபடுத்திச் சிரித்தல், பயமுறுத்தல், கேலிக்குட்படுத்துதல், பிறர் முன்னிலையில் எச்சரித்தல், வேலையை அதிகப் படுத்துதல் போன்ற குறைகளினால் கற்றலுக்கு மிகச் சொற்பமாகவே ஊக்குவிக்கப்படுவர்.

இம் முறை பற்றி எலிசபெத் ஹர்லொக் என்பவர் பிள்ளைகள் குழுவொன்றுடன் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். அவர் கணித பாடம் சம்பந்தமாக மேற்கொண்ட இவ் ஆய்விற்கு ஐந்து நாட்களைச் செலவிட்டார்.

ஒரு குழுவிற்கு கற்றலுக்கு ஊக்களிக்கும் முறையாகப் புகழ்ச்சியையும், மற்றக் குழுவிற்கு குறை கூறும் முறையையும் உபயோகப்படுத்திக் கொண்டார். மூன்றாவது குழுவிற்கு எவ்வித ஊக்கலும் வழங்கப்படவில்லை. ஆரம்பத்தில் 3 குழுக்களினதும் அடைவு மட்டம் 11.8 ஆக இருந்தது. 5 நாட்களின் இறுதியில் புகழ்ச்சி வழங்கப்பட்ட குழுவின் அடைவு 20.2 ஆக இருந்தது. குறை கூறுதல் வழங்கப்பட்ட குழுவின் அடைவு 14.2 ஆக இருந்தது. ஊக்கல் எதுவும் வழங்கப்படாத குழுவினர் அடைவு மட்டம் 12.4 ஆக இருந்தது. இதிலிருந்து இம் முறைகளின் முக்கியத்துவத்தில் ஒழுங்கு பற்றி உங்களுக்கு ஒரு தெளிவினை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

அடுத்த ஊக்கல் நுட்பமுறையான பரிசு வழங்கல் பற்றி கற்பதற்கு முன் கீழ்வரும் செயற்பாட்டைச் செய்து முடியுங்கள்.

### செயற்பாடு 2

உங்கள் பாடசாலையில் கடந்த வருடமோ அல்லது அதற்கு முன்னைய வருடத்திலோ நடைபெற்ற பரிசளிப்பு விழா ஒன்றிலிருந்து கீழ்வரும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

1. எவ்வெவ் துறைகளுக்குப் பரிசுகள் வழங்கப் பட்டன.

2. ஒரு பிரிவிற்காக எத்தனை பரிசுகள் ஒதுக்கப் பட்டிருந்தன.

3. அப்பரிசுகளைப் பெற்றுக் கொண்டவர்கள் யாவர்.

4. அப்பரிசுகளைப் பெற்றுக்கொண்டவர்கள் அதற்குப் பிற்பட்ட காலங்களில் எவ்வாறான முன்னேற்றத்தை அடைந்தார்கள்?

இச் செயற்பாட்டிற்கான தகவல்களை உங்கள் பாடசாலையில் பெற்றுக் கொள்ள முடியாவிட்டால் அயலிலுள்ள பாடசாலையிலிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.

### பரிசு



மேற்கூறிய செயற்பாட்டில் ஈடுபட்ட நீங்கள் இப்போது ஊக்கல் தொழில் நுட்பமுறைகளில் ஒன்றான பரிசு வழங்குவதிலுள்ள உளவியல் முக்கியத்துவத்தினை ஆராய்ந்து பார்ப்போம்.

நீண்ட காலமாக பெற்றோர்களும், ஆசிரியர்களும் மிருகங்களைப் பயிற்றுவிப்பவர்களும் ஒரு சிறந்த நடத்தையை மீளவலியுறுத்த பரிசுகளை உபயோகித்துள்ளனர். இங்கே பரிசு என்பதனால் கருதப்படுவது தேவையான நடத்தைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வழங்கப்படும் வெகுமதிகளையேயாகும். ''உங்களது நடத்தை நன்று அதை மேலும் விருத்தி செய்து கொள்ளுங்கள்' என்பதனையே அது உணர்த்துகின்றது.

தேவையான துலங்கல் ஏற்பட்டபின் அவற்றிற்கு பரிசு அல்லது வெகுமதி வழங்கும் போது ஊக்கம் அதிகரிக்கின்றது.

இது தொடர்பாக பி. எவ். ஸ்கின்னர் என்னும் உளவியலாளர் தனது அனுபவத்தைப் பின்வருமாறு கூறுகின்றார்.

,, ஒரு உயிரியின் நடத்தையை பரிசு என்னும் மீள வலியுறுத்தி மூலம் எங்களுக்குத் தேவையான வித்தில் அமைக்கச் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது, பசியோடு வாடிய பறவை ஒன்றிற்கு உரிய நேரத்தில் உணவு கொடுப்பதன் மூலம் ஒரு வட்டத்தில் சுற்றிவரச் செய்தல் எட்டு என்ற இலக்க உருவ அமைப்பில் திரியச் செய்தல் ஒரு கருவியின் விழிம்பில் அசையாது இருக்கச் செய்தல் போன்ற ஏற்கனவே திட்டமிட்ட துலங்கள் பலவற்றைப் பயிற்றுவிக்கலாம். இதனுல் கிடைக்கும் பெரும்பாலான விளைவுகள் மனதைக் கவரக் கூடியனவாக உள்ளன இதனுல் கற்றல் நிகழ்கின்ற தென்பதை ஒருவர் அறிந்து கெள்ள முடியும்''

ஸ்கின்னரின் கருத்துப்படி இவ்வாறுன மீளவலியுறுத்தியினுல் ஏற்படும் நடத்தை நீண்டகாலம் நிலைத்திருக்கும் தன்மை கொண்டதாகும். ஆதலால் வெகுமதி மூலம் ஏற்படுத்தும் நடத்தை தற்காலிகமாக இருந்தால் எதிர்பார்க்கப்படும் விளைவுகள் கிடைக்கமாட்டாது.

பாடசாலை தவணை முடிவிலும், வருட இறுதியிலும் அநேகமான பரிசில்கள் வழங்கப்படுகின்றன இவ்வாறு பரிசில்கள் வழங்கப்படும் சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறு:

- பரீட்சைகளில் அதிக புள்ளிகளைப் பெறல்
- பாடங்களில் அதிக புள்ளிகளைப் பெறல்
- சுத்தம்
- வரவு
- நல்லொழுக்கம்
- விளையாட்டில் வெற்றியீட்டல்

இவைகளால் வேலைகளைப் பற்றி உற்சாகமும், ஊக்கமும் சுடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊக்கல் நுட்பமுறைகளில் ஒன்றுன பரிசு வழங்கலினுல் ஏற்படும் பயன்கள் யாவை?

பரிசு வழங்குவதினுல் கற்றலில் அதிக விருப்பம் ஏற்படுவதோடு, அதிக உறுதிப்பாடு கொண்ட சரியான துலங்கலை மீளவலியுருத்தலும் வழி கிடைக்கின்றது.

பரிசு தன்னிறைவுப் பேற்றினை அல்லது தான் எதிர்பார்க்கும் முன்னேற்றத்தின் உச்சமட்டத்தினை அடைவதற்கு தன்னம்பிக்கையையும், மனத் தைரியத்தையும் பெற்றுக்கொடுக்கும்.

பரிசு உற்சாகத்துடனும், விருப்புடனும் கற்றல் செயல்பாட்டில் நீண்டகாலம் தளராது ஈடுபட்டு உழைக்க உதவும்.

எதிர்காலத்தில் மிக உயர் மட்டத்திலான பரிசில்களைப் பெற பரிசுகளினுல் பெறும் ஊக்கங்கள் ஒரு காரணமாக அமையும்.

பரிசு அளிக்கும் நுட்பமுறையிலுள்ள குறைபாடுகள் யாவை?

- பரிசு பெறுபவர்கள் மட்டுமே ஊக்கமடைவர் ஏனை யோர் அதைரியப்படுவர்.
- பரிசு பெறுவதற்காகவே தொழிற்படுவதினுல் பரீட்சை, விளையாட்டுப்போட்டி போன்றவை களில் அதிக தில்லுமுல்லுகள் ஏற்படச் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.
- பரிசுகள் பெரும்பாலும் கற்றல் நோக்கங்களுடன் தொடர்புடையதாக இல்லை.

இக்குறைபாடுகளை ஓரளவிற்கேனும் தவிர்த்துக்கொள்ள நாம் கையாளவேண்டிய வழிமுறைகள்.


- பரிசுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்
- பரிசுகளைக் குழுக்களுக்கு வழங்குதல்
- உயர்ந்த சாதனைகளைக் காட்டுபவர்களுக்கு மட்டு மல்லாது,ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் முன்னேற்றத் தைக் காட்டும் பின்தங்கிய பிள்ளைகளுக்கும் பரிசில் கள் வழங்குதல்.

இன்றும் கூட சில ஆசிரியர்கள் தினசரி வகுப்பறையில் செயற்படும்போது சிலவேளைகளில் தண்டனையையும் கூட உபயோகித்துக்கொள்வதனை நாம் காணக்கூடிய தாக உள்ளது.

**தண்டனை**

தனது நடத்தையில் தொடர்ந்து ஈடுபட தண்டனை என்று கூறுபவைகளை நிறுத்துங்கள் என்பதனையே பரிசு கள் உணர்த்துகின்றன. உளவியலாளர்கள் நீண்ட கால மாக கற்றலை ஊக்குவிக்கும் ஒரு தூண்டல் முறையாக தண்டனை மீது தங்களது கவனத்தைச் செலுத்தி யுள்ளனர்.

பண்டைக்காலக் கல்விமான்களும் கற்றலில் ஊக்ககளிக் கத் தண்டனை அவசியம் என்பதனை ஏற்றுக்கொண் டார்கள்.



''அடித்து வளர்க்காத பிள்ளையும் அகப்பை படாத கஞ்சியும் ஒன்றே'' என்றும் பண்டைய கூற்று அழிந்து போனதாகத் தெரியவில்லை. ஊக்கமளிப்பதற்குப் பிரம்பு முதலியவற்றைப் பாவித்தல் பற்றி பண்டைக் காலங்களிலும் இடம்பெற்றுள்ளன. மிக முன்னேற்றமான ஊக்கல் நுட்பமுறைகள் இல்லாத காலங்களிலே தான் தண்டனை மூலம் கற்றலை ஊக்குவித்தல் அவசியமாக இருந்தது எனலாம்.

''தண்டனையினால் நல்ல விளைவுகள் பெறுவதிலும் பார்க்க தீய விளைவுகளே ஏற்படுகின்றன'' என ஜோன் லொக் என்பவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

தண்டனையளிப்பதால் எல்லாப் பிள்ளைகளிடையேனும் ஒரேயளவான ஊக்கம் ஏற்படுவதில்லை. சில சந்தர்ப்பங்களில் தண்டனைகள் கற்றலுக்குப் பாதிப்பினை ஏற்படுத்துவதுடன் முழுமையாகக் கற்றலையையும் பாடசாலையையும் வெறுப்பதற்கும் வழி வகுக்கிறது. ''கற்றலுக்கு ஊக்குவிக்க சரீர தண்டனை எவ்வித பெறுமதியுமற்ற தொன்றாகும்'' என கொமினியஸ் என்ற கல்வியியலாளர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

கல்வியினால் தண்டனைக்குச் சிறிய பங்கு இருக்கிறது ஆனால் அதனைப் போதியளவிற்கு உபயோகித்துக் கொள்ளவேண்டும்'' என பேர்ட்ரண்ட் ரஸல் எனும் பிரித்தானியத் தத்துவஞானி கூறியுள்ளார்.

ஹொரஸ்மான் என்னும் கல்வியாளர் தண்டனை பற்றிப் பரிசோதனை செய்து என்ன கருத்துக்களைத் தெரிவிக்கின்றார்? ''முக்கியமாகத் தேவைப்படும் சந்தர்ப்பங்களைத் தவிர ஏனைய வேளைகளில் தண்டனை வழங்கக்கூடாது. அனுதாபப்படுதல், நம்பிக்கையை ஏற்படுத்துதல், வளங்க வைத்தல், தைரியம் ஏற்படுத்துதல் ஆகியவற்றினை மீண்டும் மீண்டும் செய்யவேண்டும்'' என்கின்றார்.

முறையாகவும். அறிவுடனும் வளர்க்கும் ஒரு பிள்ளைக்கு தண்டனை ஒரு சிறிய அளவிலேவே அவசியமாகும் என்ற நம்பிக்கையை அவர் கொண்டிருந்தார்.

தண்டனை பெறுபவர்கள் தாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தமது தவறுகள் காரணமாக இயற்கையினால் கிடைக்கும் ஒன்றாகவே தண்டனையைக் கருதவேண்டும் என ''ரூசோ எமில்'' என்னும் தனது நூலில் கூறியுள்ளார்.

ஒரு பந்தை அடித்து அறையின் யன்னல் கதவுகளை உடைத்த எமினுக்கு குளிர் காற்றுக் காரணமாக இரவில் நித்திரை செய்ய முடியாதிருந்தது இது எமினுக்கு இயற்கையினால் கிடைத்த தண்டனையேயாகும்.

தண்டனையால் என்ன நிகழ்கின்றது? பொரும்பாலும் தண்டனையால் பிள்ளைகளிடையே பயம் ஏற்படுகின்றது. அத்துடன் உடல், உள வேதனைகளும் ஏற்படுகின்றன

தண்டனையின் நன்மைகள்

- தண்டனையால் தவருன நடத்தைகளில் பயம் ஏற்பட்டு சரியான நடத்தைகளுக்குத் துண்டப்படுவர்
- வகுப்பறை கற்பித்தல் செயல்களில் முறையான ஒழுங்கு நிலவும்.
- இது பரிசுடன் ஒன்றிணைந்து ஒரு ஊர்கல் முறையாகக் காணப்படும்.
- சில தவருன நடத்தைகள் உள்ளவர்கள் உள்ளார்ந்தரீதியாகத் தண்டனையை எதிர்பார்ப்பார்கள்.

தீமைகள்

- தண்டனையால் தண்டனை வழங்குபவர் மீது கோபம் ஏற்படக் கூடும்.
- தண்டனை சிறந்த மனஎழுச்சிகளில் பாதிப்புக்களை உண்டு பண்ணும்.
- தண்டனையால் தவருன நடத்தைகள் மேலும் அதிகரிக்கச் சந்தர்ப்பம் இருக்கிறது.
- தண்டனையால் ஏற்படுத்தப்படும் ஊக்கல் நீண்ட காலம் நிலை பெருது.
- உடல். உளக் குறைபாடுள்ள பிள்ளைகள் கற்றலில் குறைந்தளவு ஊக்கம் செலுத்துவதால், தண்டனை அவர்களின் நிலையை மேலும் மோசமடையச் செய்துவிடும்.
- தண்டனை வழங்குதல் தற்காலிக யுகத்திற்குப் பொருத்தமேயொழிய, நவநாகரீகயுகத்திற்குப் பொருத்தமான தொன்ருக அமையாது.

ஊக்கல் முறையாகத் தண்டனையை உபயோகிக்கும் போது நாம் கவனிக்க வேண்டிய விடயங்கள்:

- ஏதாவது தவறு செய்த உடன் தண்டனை வழங்கப் படல்வேண்டும் (வீட்டில் கால் துடைப்பான் மீது நாய் சலம் விட்ட 10 நாட்களின் பின் அதற்குத் தண்டனை வழங்கப்படுகிறதென வைத்துக் கொள்ளுங்கள் அதனல் அது எதனையும் விளங்கிக் கொள்ளமாட்டாது. ஒரு பிள்ளையைப் பொறுத்தும் இந்நிலைதான் காலம் தாழ்த்தித் தண்டனைகளை வழங்குவதால் அதனை ஏற்றுக்கொள்ளத் தயார் நிலையில்லை.

- செய்த தவறுகளுக்கும், தண்டனைகளுக்கும் இடையில் தொடர்புகள் இருக்கவேண்டும்.

- பிள்ளைகளை ஊக்குவிக்கும் ஒரு முறையாகவும் அவர்களது தவருன நடத்தைகளை மற்றியமைக்கும் நோக்கத்துடன் தண்டனை வழங்கப்படுகின்றது.

- கோபத்துடன். பழிவாங்கும் எண்ணத்துடன் தண்டனையை வழங்கக் கூடாது.

- ஏதாவதொரு தவருன நடத்தைக்குத் தண்டனை வழங்குவதனுல் சிறந்த நடத்தைகளுக்கு வெகுமதிகள் வழங்கல் வேண்டும். அதனுல் தண்டனையைப் பற்றியுள்ள விருப்பற்ற நிலையினைத் தவிர்த்துக் கொள்ள உதவியாக இருக்கும்.

- தண்டனையை வழங்குவதற்கு முன் மாணவரின் உடல், உள நிலைகளை மிக நன்ருக அவதானித்துக் கொள்ள வேண்டும்.

- சரீர தண்டனை வழங்க ஆசிரியருக்குச் சட்டப்படிஉரிமையில்லாததால் தண்டனைக்குரியவரை அதிபரிடம் ஒப்படைப்பதோடு, அதற்கான காரணங்களையும் தெரிவிக்க வேண்டும்.

- பெரும்பாலும் சரீர தண்டனைகளிலும் பார்க்க உளரீதியாக தண்டனை மாணவர்களுக்கு உகந்ததல்ல என்பதையும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.

- தண்டனை வழங்கும் போது மன எழுற்சிகளுக்குட் பட்டவராக இருக்கக் கூடாது.

- தண்டனை பிள்ளைகளின் ஆளுமைக்குத் தீங்கு விளைவிப்பனவாக இருக்கக் கூடாது.

**போட்டி** போட்டி கற்பித்தலுக்கு ஊக்கலே ஏற்படுத்தக்கூடியது ஆனல் மாணவர்களில் சிறிய எண்ணிக்கையினரே போட்டியினுல் உற்சாகமடைகின்றனர். எனத்தெரிகின்றது. போட்டி ஆரம்பப் பாடசாலே வகுப்புக்களில் மிக நன்ருகக் கற்பித்தலுக்கு ஊக்குவிக்கப்பயன்படுத்தப்படும் கருவியாகப் கற்றுக் கொள்ள முடியும். ஆரம்ப வகுப்பு மாணவர்களிடம் மற்றவர்களிலும் பார்க்க முன்னுக்கு நிற்க இயற்கையிலே ஒரு விருப்பம் கொண்டிருப்பர்.

உலகம் முழுவதும் பரந்துள்ள ஊக்குவிப்பு முறையாகப் போட்டி விளங்குகின்றது. வீடு, பாடசாலே போன்றவற்றில் நிலவுவது போல சர்வதேசமட்டத்திலும் இது பரந்து காணப்படுகின்றது.

போட்டியின் நன்மைகள்,

- இது அடிப்படையான உகந்த மனநிலேக்கும், உந்தல்களுக்கும் ஒரு உதவியைப் பெற்றுக் கொடுக்கும்.

- இது மனத்தைரியத்திற்கும், தனித்துவத்திற்கும் உச்ச நிலேயை அடைவதற்கேற்ற ஆற்றலேப் பெற்றுக் கொடுக்கும்.

- இது முன்னேற்றத்திற்கும், முதிர்ச்சிக்கும், பொருத்தமான துண்டல்களேப் பெற்றுக் கொடுக்கும்

போட்டியின் தீமைகள்

- போட்டி சுயநலமுள்ள தனியான ஆதிக்கத்திற்கு வழிவகுக்கும்.

- மனிதப்பண்புகளும், சகோதரபாசத் தொடர்புகளும் இல்லாமல் போக முடியும்.

- பாடசாலே வேலேகளில் அவ்வளவு திறமையற்ற மாணவர்கள் மீது போட்டிகள் சிறப்பின்மையான தாக்கங்களே உண்டு பண்ணும்.

- எப்பொழுதும் போட்டிகளில் தோல்வி அடையும் மாணவர்கள் பின்வாங்குதல், விரக்தி, கோபம், வெறுப்பு, வெட்கம், ஏமாற்றம், நற்பண்புகள் நீங்குதல் ஆகியவைகள் ஏற்படக் சந்தர்ப்பம் உருவாகின்றது.

- போட்டி காரணமாக பொருமை, கடமை உணர்வு அற்றுப்போதல், பழிவாங்கும் எண்ணம், எதிர்ப்பு மனப்பாங்கு, ஆகியவைகள் ஏற்படக்கூடும்.

இவைகளை நிவர்த்தி செய்யக்கூடிய வழி முறைகள் எவை?

போட்டியுடன் ஒத்துழைப்பையும் ஒரு ஊக்குவிக்கும் முறையாகப் பாவித்துக்கொள்ளமுடியும். போட்டி களில் திறமையான மாணவர்களின் செயற்பாடு மட் டுமே அதிகரிக்கிறது. அதனுல் ஒத்துழைப்பு அதனேடு சேரும்போது சகல மாணவர்களிடமும் காணப்படும் பல்வேறு திறமைகளும் வெளிப்படுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. ஒத்துழைப்புக் காரணமாக போட்டியில் சகலரும் கலந்துகொள்வர்.

போட்டியில் ஒத்துழைப்பு ஏற்படுவதினுல் ஏற்படும் பயன்கள்.

- தனியார் தொடர்புகளும், ஒற்றுமையும் விருத்தி யடைந்து கற்றலில் ஒன்றிணைந்து ஈடுபட ஊக்கல் அதிகரிக்கும்.
- கற்றலில் எதிர் நோக்கப்படும் பல்வேறு பிரச்சினை களையும் இலகுவாகத் தீர்க்க முடியும்.
- நல்லெண்ணம், சிறந்த மனப்பாங்கு, தன்னடக்கம் போன்றவைகள் ஏற்படும்.
- கலந்துரையாடல் மூலம் மிகச் சிறந்த கற்றலுக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொள்ளலாம்.
- பெரும்பாலானேருக்குச் சித்தியடையச் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.
- கஸ்டத்துடன் வேலை செய்யும்போது ஏற்படும் சோம்பல், களைப்பு என்பவைகளைக் குறைக்க முடியும்.
- போட்டி மூலம் ஒருவர் முதலாவது இடத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதல்ல அதன் மூலம் தனது நிலையை விருத்தி செய்யும் குறிக் கோளுடனுக்கு ஏற்ப வேலைசெய்ய ஊக்கம் ஏற்படு கிறது.
- திறமையற்றவர்களுக்கும் திறமையுள்ளவர்களுக் கும் வெற்றியின் மகிழ்ச்சியை அனுபவிப்பதன் கார ணமாக அருட்சி (கலக்கம்) குறைகின்றது.

## செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல்

செயற்பாடுகள் மூலம் கற்றலுக்கான ஊக்கலை அதிகரிக்க முடியும் ஆசிரியர் தனது வேலைகளில் காட்டும் உற்சாகங்களுக்கேற்பவே மாணவர்கள் தங்கள் வேலைகளில் காட்டும் உற்சாகமும், நாட்டமும் தங்கியிருக்கும். ஆசிரியர் தனது வேலைகளில் உற்சாகமின்றி ஒரே விதமாகத் தொழிற்படுவராயின் மாணவர்களின் செயற்றிறன் நலிவடையும்.

வகுப்பில் கற்பித்தல் முறைகளிலும், பாடத்தை எடுத்துக் கூறுவதிலும் பல்வேறு முறைகளைக் கையாள்வதால்



மாணவர்களைக் கற்றலுக்கு ஊக்குவிக்க முடியும். இயற்கையிலேயே விருப்பமற்ற ஒரு பாடத்தை செயற்பாடுகள் மூலம் கற்பிப்பதினால் மாணவர்களை உற்சாகப்படுத்தலாம். உதாரணமாக படங்கள், வரைபடங்கள், அட்டவணைகள், கரும்பலகை முதலியவற்றைப் பொருத்தமாக உபயோகித்துக் கொள்ளல் பல செயற்றிட்டங்களிலும் மாணவர்களை ஈடுபடுத்திக் கொள்ளல் குழுப் போட்டிகளை நடாத்துதல், வெளிக்கள வேலைகள் ஆகியவைகள் கற்றலுக்கான ஊக்கலை அதிகரிக்குமெனக் கூற முடியும்.

ஆசிரியர் தனது பாட ஆரம்பத்திலேயே பொருத்தமான ஒரு செயற்பாடு மூலம் மாணவர் மனதைக் கவர்ந்து பாடத்தை ஆரம்பித்தால் அப்பாட இறுதி வரைக்கும் அம்மாணவர்களை உற்சாகமாக வைத்திருக்க முடியும்.

செயற்பாடுகளில் குழுச் செயற்பாடுகளும் மிகமுக்கியமானதாகும். கற்றலுக்கு ஊக்குவித்தலிலும் ஒரு வரது குழு கூடின செல்வாக்கைச் செலுத்தும் பொதுப் பிரச்சினைகளை விடுவிப்பதற்கும், ஜனநாயக முறைகளில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் குழுச் செயற்பாடுகள் பெரும் பங்கினை வகிக்கும்.

ஆரம்ப வகுப்புக்களில் மாணவர்கட்கான கற்பித்தலில் செயற்பாடுகள் மிகச் சக்தி வாய்ந்த ஒரு ஊக்கலாக இருக்கும் அதற்குப் பல காரணங்கள் உள்ளன. இயற்கையிலே மாணவர்கள் சுறுசுறுப்பானவர்கள் ஓடியாடி விளையாட விரும்புவார்கள். புதுமை நாட்டமும், ஆராய்வூக்கமும் கொண்டவர்கள். ஆரம்ப வகுப்பு மாணவர்கட்டு கணிதம், மொழி, சுற்றாடல், போன்ற பாடங்களின் பாட விடயங்களை மட்டும் கற்பதால் அவர்களுக்கு கற்க நாட்டம் இருக்காது. அது தொடர்பான செயற்பாடுகளே அவர்களுக்கு முக்கியமானதாகும். சிரட்டை போத்தல் ஆகியவற்றினால் அளக்கப் பழகும் மாணவர்கள், அதனூடாக கணித எண்ணக் கருவைக் கற்று விருத்தியாக்குகின்றார்கள். கணிதச் செயற்பாடுகளில் பிள்ளைகள் ஈடுபடும் போது அவர்களின் மொழியறிவும் அதிகரிக்கின்றது. அதனால் ஆராய்வதற்கான ஒரு தூண்டலையும் பெறுவார்கள். விளையாட்டு - வீடு

கட்டல், கடைபோடல், ஊர்வலம் உணவு சமைத்தல் போன்ற செயற்பாடுகளினூடாக சிறந்த கற்றல் சந்தர்ப்பங்களை ஆக்கிக் கொடுக்கலாம். அது தொடர்பான மேலதிக அறிவினைப் பெறுவதற்கு ஆரம்பப் பாடசாலையின் ஒன்றிணைந்த பாடத்திட்டத்திற்கான ஆசிரியர் கை நூலை வாசிப்பது மிகப் பயனுள்ளதாகும்.

சிறு பிள்ளைகளைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்து வதற்காகப் பாவித்துக் கொள்ளக் கூடிய பொருட்களின் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப்படுகின்றது.

சிறு விளக்குமாறுகள், தும்புத்தடிகள், துடைப்பங்கள், குப்பை போடும் பாத்திரங்கள், சிரட்டைகள், தகரப் பாத்திரங்கள், நீர் ஊற்றும் பாத்திரங்கள் விளையாட்டுத் தராசு, மாணவர்களின் உயரத்திற்கேற்ப செய்த கரும்பலகை, மூங்கில் குழாய், கட்டைகள், விதை வகைகள் சிப்பிகள். போத்தல் மூடிகள் கயிறுகள் பட்டைகள் பல்வேறு விளையாட்டுப் பொருட்கள், பற்றரித்துண்டுகள் போன்ற பொருட்களைப் பெற்றுக் கொள்ள செயற்பாடுகளில் ஈடுபடுத்தலாம். வகுப்புக்களில் நிலைகளுக்கேற்ப இச் செயற்பாடுகளும், செயற்பாடுகளுக்கு உபயோகிக்கப்படும் உபகரணங்களும் மாற்றமடையும் சுற்றாடலில் அனுசரணையுடன் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய பொருட்களும், பிள்ளைகளிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய உபகரணங்களும் இச் செயற்பாடுகளில் இடம் பெறல் வேண்டும்.

**செயற்பாடு 3**


4ம், 5ம் வகுப்புப் பிள்ளைகளின் செயற்பாட்டிற்காக உபயோகிக்கக்கூடிய பொருட்களின் பட்டியல் ஒன்றைத் தயாரிக்குக.

பின்பற்றல் மாணவரின் ஒரு இயல்பாகும். தமது ஆசிரிய ஆசிரியைகளை முன்மாதிரியாகப் மாணவர்கள் பின்பற்றுவது கடினமானதொன்றல்ல பிள்ளை வளர்ச்சியின் பின்பற்றல் ஒரு முக்கிய அம்சமாகும்.

**சிறந்த முன்மாதிரிகளைக் காட்டுதல்**

சிறந்த முன்மாதிரிகள் மாணவர்களது கற்றலுக்கு பெரிதொரு ஊக்கலை ஏற்படுத்துகின்றன. அதற்கு ஆசியர்களே பொருந்தமான மிக அண்மையிலுள்ள சிறந்த மாதிரிகள் அல்லது முன்மாதிரிகளாவர். ஆசிரியர் மாணவர்க்கு முன்மாதிரியாகக் கைக்கொள்ளக்கூடிய உயர்ந்த மட்டத்திலான குணப்பண்புகளையும் கொண்டிருப்பதோடு கற்றலில் நாட்டமுள்ள வராகவும், நல்லொழுக்க விருத்தியுள்ள ஒருவராக வும் இருக்க வேண்டும்.

அதேபோல பெரும் முயற்சியுடன் உழைத்து, கஸ்டங்கட்கு மத்தியில் வாழ்க்கையைத் திருப்தியாகமாற்றியமைத்துக் கொண்ட வீரபுருசர்களில் கருத்துக்களையும் முன்மாதிரிகளையும் வழங்குவதால் வகுப்பறையிலிருக்கும் பிள்ளைகளின் பெரும்பாலானோரிடம் உற்சாகத்தை ஏற்படுத்த முடியும்.



சில உளவியற்காரணிகளும் பின்பற்றலில் செல்வாக்குச் செலுத்துகின்றன. பிள்ளைகள் குமரப்பருவத்திற்குக் காலடி எடுத்து வைக்கும்போது, தாம் விரும்பும் தனிப்பட்டவர்களையும், சில சிறப்பியல்வுகளையும் பின்பற்றுவார்கள். என்பதை நீங்கள் ஏற்கனவே கற்றுள்ளீர்கள். இவ்வாறு பிள்ளைகளினால் பின்பற்றப்படுபவர்கள் பெரும்பாலும் சிறந்த முன்மாதிரியான நடத்தையையுடையவர்களாக இருக்கமாட்டார்கள். நடிகன், நடிகைகள், சித்திரக் கதைகள், நாவல்கள் ஆகியவற்றில் இடம்பெறும் நடத்தைகள், புரட்சி செய்பவர்கள் போன்றவைகளே பிள்ளைகளது சிந்தனைகளில் முக்கிய இடம்பெறும். இவ்வாறானவர்களைப் பின்பற்றல் கற்றலை ஊக்குவிப்பதற்குப் பதிலாக அதனை அகற்ற உதவியாகும் ஒரு கருவியாகிவிடும். ஆதலால் இப்பருவத்தில் சிறந்த முன்மாதிரிகளை வழங்குவது பற்றி ஆசிரியர் விசேட கவனம் செலுத்தவேண்டும்.

சிறந்த முன்மாதிரிகளை வழங்குவதால்நான் என்ற அகங்காரம் பெற்று ஊக்கலையடைவர், அதாவது மிக உயர்ந்த செயல்களுக்காக வெளிப்புற ஊக்கல்களால் இன்றி இயந்திரம் போல் செயற்படும் ஒருநிலை உருவாகும், அகத்திலிருந்து எழும் சக்திமிக்க உற்சாகம் கல்விச் செயல்களின் பெரும் பகுதியைச் செய்ய உதவுகின்றது. இவ் உற்சாகத்தை நான் என்ற அகங்காரம் செயற்படுத்துகின்றது, அதே நேரம் சிறந்த முன்மாதிரிகள் நான் என்ற அதிகாரத்தை உருவாக்க உதவியாக உள்ளன. நேர்மை, சுத்தம், பொதுநலம், வீரம், தூய எளிய வாழ்க்கை போன்ற எண்ணக் கருக்களின் வளர்ச்சிக்கு இவ்வாறான பண்புகளில் பூரணத்துவம் பெற்ற தனிப்பட்டவர்களையும் அவர்களது போதனைகளையும் எடுத்துக் கூறலாம்.

சமயங்களைத் தோற்றுவித்த பெரியோர்களின் வரலாறு நடத்தைப் பண்புகள் வீரம், உறுதி' கருணை, கட்டுப்பாடு முதலிய முன்மாதிரிகளை எப்படிப்பட்ட ஒருவரினதும் உள்ளத்தைக் கவரக்கூடிய முறையில் எடுத்துக்காட்ட முடியுமல்லவா?

சமயங்களைத் தோற்றுவித்த பெரியார்களை மட்டுமல்லாது அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம்லிங்கன் இந்தியாவில் மகாத்மாகாந்தி, ரவீந்திரநாத்தாகூர் ஆகியோரின் நடத்தைகளையும் பல்வேறு துறைகளில் முக்கியம் பெற்றுள்ள மார்கோணி, கொலம்பஸ், ஜேம்ஸ்குக், போன்றோரின் நடத்தைகளையும் கற்பிப்பதன் அந்நடத்தைகளைக் கூறும் புத்தகங்களைக் கொண்ட நூல்நிலையம் வைத்திருப்பது இவ்வாறான ஊக்கல் பெறுவதற்கு உதவியாக இருக்கும்.

### முன்னேற்றம் பற்றிய விரிவான விளக்கம்

நடத்தைகளை அல்லது கற்றலை விருத்தி செய்து கொள்வதற்கு அவைகளின் முன்னேற்றம் பற்றிய அறிவு அத்தியாவசியமானதாகும். இதனை ஒரு இலகுவான உதாரண மூலம் விளங்கிக்கொள்ள முடியும். கிரிக்கட் விளையாட்டில் ஈடுபடுவோர் அடிக்கடி புள்ளி போடப்படும் பலகையைப் பார்த்துக் கொண்டே விளையாட்டில் ஈடுபடுவதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். இவ்வாறு அவர்கள் புள்ளிப் பலகையிலிருந்து பெறும் புள்ளிகள் மிக நன்றாக மீண்டும் விளையாட மீளவலியுறுத்திகளாக அமைகின்றன. இப்புள்ளிகளை அறிவதினால் மேலும் தேவையான புள்ளிகளைப் பெறுவதற்கு ஒரு உந்துதலை அல்லது ஊக்கலைப் பெற்றுக்கொள்கிறான்.

இச்செயல்முறை வகுப்பறைத் தொழிற்பாடுகளுக்கும் பெரும்பாலும் பொருத்தமானது. மாணவன் தனது தற்போதைய அடைவினை விரைவாக அறிந்துகொள்வதினால் மேலும் தொடர்ந்து கற்பதற்கான ஒரு ஊக்கினைப் பெற்றுவிடுகின்றான்.

மாணவன் தன் முன்னேற்றம் பற்றி அறிந்துகொள்வதினால் தனக்குள்ளேயே அவன் ஒரு போட்டியை ஏற்படுத்திக் கொள்கிறான், தற்போதைய தனது அடைவுகள் எவ்வாறானவை? அல்லது தனது அடைவுகள் குறைந்து காணப்படுகின்றனவா? போன்றவைகளை அவன் தன்னை மற்றவர்களுடன் ஒப்பிடுவதன் மூலம் தன்னை எதிர்கொள்ளும் தடைகளைத் தவிர்த்துக் கொள்வதன் மூலமும் அறிந்து தனது நிலையை முன்னேற்றிக் கொள்ள முயற்சிப்பான்.

தங்கள் முன்னேற்றத்தைப் பற்றி அறிந்து கொள்ள ஒவ்வொருதரிடமும் விருப்பம் இருக்கின்றது. பரீட்சைக்குத் தோற்றி விரைவில் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியுமானால் நாம் அடையும் ஆச்சிரியத்திற்கு அளவேயில்லை. பரீட்சை ஒன்றை நடாத்தினால் அதன் பெறுபேறுகளை உடனடியாக வழங்க வேண்டும்.

அதேபோன்று பிள்ளைகளுக்கும் அவர்களின் நிலையைத் தெளிவாக எடுத்துக் கூறல்வேண்டும். சிறந்த ஊக்கலை ஏற்படுத்த விளைப்பத்திரங்களை நுணுக்கமாக வன்றி எளிமையாக பார்க்க வேண்டும். ஆரம்பத்தில் விடைப் பத்திரங்கள் பற்றிய விமர்சனங்கள் கடுமையாக இருக்கக்கூடியது. நம்பிக்கையும், தகுதியும் படிப்படி யாக அதிகரித்துச் செல்லும் வகையில் விமர்சனங்கள் அமையவேண்டும். ஆரம்பத்திலே கடும் விமர்சனங் களையும், நுணுக்கமான திருத்தங்களையும் மேற்கொண் டால், முன்னேற்றம் மழுங்கடிக்கப்படுவதோடு, கற்ற லிலுள்ள ஊக்கமும் இல்லாமல் போய்விடும். இது ஒரு செடியினை அதனை முளையிலே கிள்ளி விடுவதனைப் போன்றதாகும்.

## வெற்றி அனுபவங்களைப் பெறல்

மனிதன் ஏதோ ஒரு உந்தலினுல் வாழ்க்கையில் வெற்றி பெறத் தூண்டப்படுகின்றுன். இவ்வெற்றி மகிழ்ச்சி யான அனுபவங்களையே கொடுக்கும் எனலாம். உள வியல் ஆய்வுகளின்படி, மகிழ்ச்சியான (திருப்தியைக் கொடுக்கும்) அனுபவங்களோ கற்றலை வழிநடத்தும் பலம் வாய்ந்த ஊக்கங்களாகும். ஏதாவதொரு பிரச் சினையை விடுகதையை விடுவித்துக் கொள்ளும் மாண வன் மேலும் அவ்வாறுன செயல்களில் ஈடுபடுவது வழக்கம். ''வெற்றி பெறுவதைப் போன்ற ஒரு வெற்றி வேறென்றில்லை'' என்ற கூற்றை நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள். ஆதலால் ஆசிரியர்களாகிய நீங்கள் வெற்றியைப் பெறும் அனுபவங்களை எல்லா மாணவர் களும் அடைவதற்கேற்ற சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் உங்கள் கடமைகளாகும்.

வெற்றி பெறும் அனுபவங்கள் கற்றலில் செல்வாக்குச் செலுத்தும் விதம் பற்றி பேர்லின் பல்கலைக்கழக உள வியல் பேராசிரியராக இருந்த ''கேர்ட் லெவின்'' பி. ஹோம் என்பவருடன் சேர்ந்த ஓர் ஆய்வினைச் செய்துள்ளார். ''ஒரு செயலைத் திருப்தியாகச் செய் தால் அதற்குச் சமனுன சித்தி அல்லது திருப்தியற்றுச் செய்தால் அதற்குச் சமனுன சித்தியின்மை பற்றிய அனுபவங்கள் தனிப்பட்டவர்களிடம் ஏற்படமாட் டாது.'' என்பதைத் தீர்மானித்தார்கள். ஒரு செயல் ஒரு சந்தர்ப்பத்தில் சித்திபற்றிய உணர்வினைப் பெற் றுத் தருவதோடு, அச்செயல் வேறொரு சந்தர்ப்பத்தில் சித்தியின்மை பற்றிய உணர்வினைப் பெற்றுத் தருகின் றது. ஒருவரின் வெற்றி எதிர்பார்ப்பு மட்டங்கள் அத னில் செல்வாக்குச் செலுத்துவதினுலேயாகும். குறைத்த எதிர்பார்ப்புக்களுடன் உள்ளவர்கள் இலகுவான வெற்றியினுல் மிகப் பெரிய அனுபவத்தைப் பெற்று மகிழ்வர். இதனை ஒரு உதாரணம்மூலம் விளக்கலாம். பல்கலைக்கழகத்தில் இளங்கலை மாணிப் பரீட்சையில் முதலாவது தரம் கிடைக்கும் என சிரமத்துடன் கற்ற ஒருவர் இரண்டாம் வகுப்பில் சித்தியடைந்தார்.

அதனைப் பெரும் ஏமாற்றமாகக் கருதுவான். ஆனால் பரீட்சையில் சித்தியடைய மாட்டேன் என நினைத்த ஒருவன் சித்தியைப் பெற்றுவிட்டால், அதன் மூலம் அவன் பெரும் மகிழ்ச்சி கற்றலை மேலும் ஊக்குவிக்கும்.

கற்றலில் பிள்ளையின் செயல்களை இலகுவாக்குவதன் மூலம் கல்வியில் பின்தங்கிய, மந்தகதியுள்ளவர்களும் வெற்றி பற்றிய அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். அதேபோல் மிகக் கடினமான பணிகளை வழங்குவதனூடாக தோல்வி பற்றிய அனுபவங்களைப் பெறுவர். ''வெற்றி கற்றலுக்கான ஊக்கலை அதிகரிக்கும் என்றும், தோல்வி கற்றலுக்கான ஊக்கலை குறைத்துவிடும்'' என்றும் ''லான்ட்ஸ்'' என்ற உளவியலாளரது ஆய்விலிருந்து நிரூபிக்கப்பட்டுள்ளது. எனினும் தோல்வி பற்றிய அனுபவங்களும் மிகச் சிறப்பாகக் கருமங்களைக் நிறைவேற்றுவதற்குக் காரணமாகலாம் என்பதற்கும் பல உதாரணங்கள் இருக்கின்றது.

றொபேட் புரூஸ் என்னும் சேனதிபதியின் கதையை இங்கே ஞாபகப்படுத்த விரும்புகின்றோம். றோபேட் ஆறுமுறை படையெடுப்பில் ஈடுபட்டும் தோல்வியடைந்தார். இறுதியில் ஒரு யுத்தம் செய்ய விருப்பமின்மையால் ஒரு குகையொன்றில் மறைந்திருந்தார். ஆனல் குகையில் வலை அமைத்துக்கொண்டிருந்த சிலந்தி தோல்வியினல் விரக்தியடையாது பிழை விட்டுவிட்டு தனது செயலை இறுதிவரை நிறைவேற்றிக்கொண்டிருந்ததை அவர் கண்டார். இதனல் ஊக்கமடைந்த அவர் ஏழாவது முறை படையெடுத்து வெற்றி கண்டார். சிலந்தியின் வெற்றி பற்றிய அனுபவமே புரூஸின் ஊக்கலுக்கு ஒரு காரணியாக அமைந்ததெனலாம். இதிலிருந்த தோல்விகூட சில சமயம் வெற்றிக்கு வித்திடலாம் என்பதை உணரக் கூடியதாக உள்ளது. ஆதலால் வகுப்பறையில் சில மாணவர்கள் தோல்வியினல் அதைரியம் அடையும்போது அவர்களை ஊக்கப்படுத்தி வழிப்படுத்த வேண்டியது ஆசிரியர்களாகிய உங்களது கடமையாகும். தோல்வி நிலையானதொன்றல்ல என்பதை மாணவர்கட்கு விளங்கவைக்க வேண்டும். இதற்கான மாணவர்களது பல்வேறு துறை அடைவுகளையும் அறிய, மதிப்பீட்டு அறிக்கைகளை தயாரிக்கப்படுவதோடு, ஆசிரியரின் தன்னுதிக்கமும் குறைக்கப்படல் வேண்டும்.

**அவா மட்டம்**

அவா மடடம் என்பது ஒருவன் தனது திறமைகளுக் கேற்ப ஏதோ ஒரு செயலை நிறைவேற்றிக்கொள்ள அவனிடம் ஏற்படும் எதிர்பார்ப்புக்கள் பற்றிய ஓர் உணர்வாகும். தத்தமது அனுபவங்கட்கு ஏற்ப தனது காரியங்களை நிறைவேற்றிக்கொள்ளும் சக்திபற்றிய உணர்வு சகலரிடமும் காணப்படுகின்றது. இது சம்பந்தமான தனிப்பட்டவர்களை ஊக்கப்படுத்தவேண்டியது ஆசிரியரது கடமைகளாகும். நுட்பமான அவா ஒவ்வொரு மனிதனையும் தைரியமூட்டும் பிரான்ஸ் அலெக்ஸாண்டர் என்பவரது கருத்திற்கேற்ப அவா மட்டத்தைப்போல தோல்விக்கு எதிராகப் போராடுவது மனித வாழ்க்கையின் ஒரு முக்கிய அம்சமாகும். ''பூரண திருப்தியைப் பெற்றுக்கொண்டவர்கள் கற்பதில் குறைப்பாடுள்ளவர்களாவர்'' என்று நில்மிலர் கருத்துத்தெரிவிக்கின்ருர். ஒரு தேவையில் திருப்தியின்மை ஏற்படும்போது அதில் வெற்றி பெறவேண்டிய அவா நிலை ஒருவரிடம் தோன்றும். அதனுல் அவன் குறித்த வேலையில் இறுதிவரை மிகுந்த அவதானத்துடன் முன்னேறிச் செல்லத் தூண்டப்படுவான். சிலரின் அவா மட்டும் உறுதியாகவும் அதேநேரம் அவனது அடைவு மட்டத்திற்கு அப்பாற்பட்டதாகவும் இருக்கும். அப்போது அவன் தொடர்ச்சியாகத் தோல்விகளைப் பெற்றுத் தூண்டப்படுவான். அதே நேரம் அவா மட்டம் அவனது அடைவு மட்டத்திலும் குறைந்து இருக்கவும் கூடாது. அதனுல் தன்னம்பிக்கை இழத்தல் இகழ்ச்சிக்குள்ளாதால் தன்னில் அளவுக்கதிக கவனம் செலுத்துதல் போன்ற கஸ்டங்களுக்குள்ளாவர்.

தன்னுல் அடைய முடியாத ஒரு எதிர்பார்ப்பு மட்டத்தை ஏற்படுத்திக்கொள்வது போலவே தமது ஆற்றலுக்கு மிகக் குறைந்த எதிர்பார்ப்பு மட்டத்தை ஏற்படுத்திக்கொள்வது ஆபத்தானதென்பதை ஆசிரியர் மாணவர்களுக்கு விளங்கப்படுத்தவேண்டும். "உயரம் பாய்பவருக்கு அவர் பாயும் அளவிலும் கூடிய உயரத்தில் குறுக்காகத் தடியை வைப்பதினுலோ அல்லது அவரால் பாயும் அளவிலும் குறைந்த மட்டத்தில் வைப்பதினுலே எவ்வித பயனும் ஏற்படாது.

**தெளிவான இலக்குகளை வழங்குதல்**

கற்றலை ஊக்குவிக்கச் செல்வாக்குச் செலுத்தும் நோக்கங்கள் குறிக்கோள்கள் பற்றி மாணவர்களிடையே ஒரு தெளிவான விளக்கம் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் மாணவர்கள் இறுதி நோக்கத்தை அடைய முடியாதவர்களாகிவிடுவர். கற்றலுக்கு ஊக்குவிக்க குறிக்கோள்களை வழங்கும்போது ஆசிரியர்களாகிய நீங்கள் பாடத் திட்டத்தில் கூடிய கவனம் செலுத்துதல்வேண்டும். பாடத்திட்டத்திலுள்ள எல்லாப் பாடங்களையும் செயற்பாடுகளையும் பற்றிய நோக்கக் குறிக்கோள்களையும் பற்றி ஆசிரியர்களாகிய நீங்கள் மட்டும் அறிந்தால் போதாது அவைகளை மாணவர்களும் நன்ருக அறிந்

திருக்கவேண்டும். ஒரு பாடத்தின் பிரதாள நோக்கம் பாடத்தைக் கற்பித்தல் என்ற குறிக்கோளை மட்டும் உள்ளடக்கியதல்ல குறிக்கோள்கள் நோக்கங்களிலும் பார்க்க மிக இலகுவானவை. ''ஆழம் அறியாது காலை விடாதே'' என்ற பழமொழியை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். ஒரு நோக்கத்தை அடைவதற்கு பாதையும், குறிக்கோள்களும் எவ்வளவுதூரம் செல் வாக்குச் செலுந்துகின்றன என்பதில் நம் முன்னோர் கள் எவ்வளவு தூரம் நம்பிக்கை கொண்டிருந்தார்கள் என்பதனை இதனூடாக விளங்கிக் கொள்ளக் கூடிய தாக இருக்கின்றது.

இது தொடர்பாகப் பரந்த விளக்கத்தினைப் பெற் றுக் கொள்வதற்கு ''கல்வியின் நோக்கங்களும் குறிக் கோள்களும்'' என்ற மொடியூலை வாசியுங்கள். அம் மொடியூலில் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் வாசிக்கும்போது நீங்கள் எவ்வாறு ஊக்கம் பெறுகின் றீர்கள் என்பதனையும் கல்வியில் நோக்கம் பெறும் முக்கியத்துவத்தினையும் அவதானியுங்கள்.

நீங்கள் இதுவரை கற்றவற்றை உறுதிப்படுத்திக் கொள் வதற்கான கீழ்வரும் செவ்வைப்பார்த்தலை செய்யுங் கள்.

**செவ்வைபார்த்தல் 2**

நீங்கள் இதுவரை கற்றவைகளிலிருந்து பொருத்த மான சொற்களைப் பாவித்து இடைவெளிகளை நிரப்புக.

1. குறை கூறுதலை ................... எனச் சுட்டிக் காட்டுவது மிகவும் பொருத்தமானதாகும்.

2. தனது நடத்தையில் தொடர்ந்து ஈடுபடுவதை ................... என்பதனையே தண்டனை கட்டளையிடு கின்றது.

3. பரிசளிப்பதானுல் ஊக்கம் ஏற்படுவது ............. ....... .. ஏற்பட்டவுடனேயே வழங்குவதில் தங் கியுள்ளது.

4 தண்டனை பெறுபவர்கள் தாம் ஏற்றுக்கொள்ளக் கூடிய தவறுகள் காரணமாக ........................ கிடைக்கும் ஒன்ருகவே தண்டனையைக் கருத லேண்டும் என ரூசோ கூறியுள்ளார்.

5. பரிசு பெறுபவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர் ஏனையோர் அதனுல் ......................... படுத் தம்படுகின்றனர்

6 ஊக்கமளிப்பதில் போட்டிமுறையில் காணப்படுப் குறைபாட்டை ...............ல் நீங்கிவிடலாம்.

7. கற்றலில் தெளிவான இலக்குகளை சுட்டிக்காட்டும் போது.........................மீது கவனம் செலுத்து தல் வேண்டும்.

8. அடைவு மட்டத்திற்கேற்ப சாதனை மட்டம் .................வாகவோ ................. வாகவோ இருக்கக் கூடாது.

9. லன்ரிஸ் என்பவர் -- வெற்றிகள் ஊக்கத்தை ................. என்னும், தோல்விகள் ஊக்கத்தை ................ என்றும் கூறினர்.

10. கற்றலில் உடனடியாக விளைவுகளை அறியமுடியு மாயின்.......................அதிகமாக இருக்கும்.

உங்கள் விடைகளை இம் மொடியூலின் இறுதியில் தரப்பட்டுள்ள விடைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

இப்பொழுது நீங்கள் ஊக்கலை கணிக்கும் தொழில் நுட்ப முறைகளையும் இவற்றை எவ்வாறு வகுப்பறை யில் பயன்படுத்தலாம் என்பதனையும் நன்கு விளங்கி யிருப்பீர்கள் என நினைக்கின்றோம். பல உளவியல் கொள் கைகளும், தத்துவங்களும் இவ்தொழில்நுட்பங்களை உருவாக்க பின்னணியாக அமைந்தது. அவற்றில் சில தற்போதைய பயன்பாட்டில் கைவிடப்பட்டுள்ளது. உங்களுக்குப் பயனுள்ள சில கொள்கைகளை இங்கு தருகின்றோம்.

பகுதி III

## 5.0 ஊக்கமளித்தலில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்

**இயல்பூக்கக் கொள்கை**

1908 ஆண்டில் வில்லியம் மக்டுகெல் இக்கொள்கையைக் வெளியிட்டார். அவர் சிறிய உயிரினங்களைப் பற்றியும் பிராணிகளையும் பற்றியும் ஆய்வுகளை நடத்தினர். பின் அதன் விளைவுகள் மனித நடத்தையுடனும் தொடர்பு படுத்தலாம் என உணர்ந்தார். அவருடைய கொள்கை யைக் சமுதாய உளவியலுக்கான முகவுரை என்ற நூலில் முதன்முதலில் குறிப்பிட்டார். அவரின் கருத்துப்படி இயல்பூக்கம் உயிர்வாழும் பிராணிகளினது நடத்தைகளை தீர்மானிப்பதாக அமைகின்றது. இயல் பூக்கம் பரம்பரையானது அதே முறையில் அவைகள்

உடல் உள, சார்ந்த போக்குகளைக் கொண்டது. புலக் காட்சி பெறுவதிலும் கவனத்தை யீர்ப்பதலிலும் இவை செல்வாக்கு செலுத்துகின்றன. பெற்றோர்கள் பிள்ளை கள் மீது செலுத்தும் அன்பு, பாசம் என்பவையும் பேரூக்கம் என்பவை போன்ற இயல்பூக்கங்கள் மனித நடத்தைகளை வழிநடத்தும் ஊக்கல் விசைகளாக அமை கின்றன. அதிலிருந்து ஒரு தனிப்பட்டவர் மனவெழுச்சி களுடன் கூடிய தூண்டல் பேறுகளை பெறும்போது எதிர் வினைவுகளை விளைவிப்பது அவர் பரம்பரையில் பெற்ற இயல்பூக்கங்களில் தங்கியுள்ளது. அவரது கொள்கை யின் மையமாக இது அமையுமாயின் நாங்கள் இதில் கூடிய கவனத்தைச் செலுத்தவேண்டும். பரம்பரையி லான இயல்பூக்கங்கள் மூன்று நிலைகளைக் கொண்டன.

- அறிதல் அல்லது புலக்காட்சி பெறுதல்

  (அறிகை)

- உணர்தல் அல்லது மனவெழுச்சி பெறுதல்

  (தாக்கம்)

- தொழிற்படுவதற்கு உந்துதல்

  (தொழிற்பாடு)

இவ்வாறு வகைப்படுத்திக் கூறப்பட்டபோதிலும் அவை ஒன்றிணைந்தவையாகவும் குறிப்பிட்டளவுக்கு ஒன்றின் மேல் ஒன்று மேற்படிந்தும் இருக்கும். பாடசாலையில் வகுப்பறை மாணவர்களுக்கு ஊக்கமளிக்க முற்படும் போது, இதனைப்பற்றி நீங்கள் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். அதனால் இதனை பூனைக்குட்டியின் நடத்தை கள் மூலம் விபரிக்கப்படுகின்றது. பூனைக்குட்டி அதன் இயல்பூக்கங்களால் ஊக்கப்படுத்தப்படுவதைக் காண லாம். முதலில் அசையும் பொருளைக் காணுதல் அதனால் மனவெழுச்சி அருட்சி பூனைக்குட்டியிடம் ஏற்படுகின் றது அதனால் அசையும் பொருளை (எலி) பிடிப்பதற்கு பாய்கின்றது. இவ் மூன்று நிலைகளும் முன்பு தரப்பட்ட அறிகை தாக்கம், தொழிற்பாடு என்பவற்றுடன் தொடர்புடையவையாகும். இந்த மூன்று நிலைமை களும் அல்லது இயல்பூக்கங்கள் பிராணிகளுக்கு மட்டு மல்ல குழந்தைகளிடமும் வளர்ந்தவர்களிடமும் காணப் படுகின்றது என்பதை விளங்கிக்கொள்வது கடினமான தல்ல இடிமுழக்கம் கேட்கும்போது குழந்தை தாயிடம் ஓடுகின்றது. வழி தவறிய குழந்தை அழும்போது தாய் வழிகாட்டுவது என்பனவும் மூன்று நிலைகளைக் கடந்து செல்கின்றன இவற்றை ஊக்கல் விசைகள் என்று மக்டு கள் கருதுகின்றார்.

இயல்பூக்கங்களின் இலட்சணங்கள் (சிறப்பியல்புகள்)

- இவைகள் பரம்பரையில் தோன்றிய இலட்சணங் கள் அல்லது பிறப்பிலேயிருந்து காணப்படும் நாட்டங்கள்.
- பரம்பரை இயல்பூக்கங்கள் எல்லா உயிரினங்களிலும் வேறுபட்ட மட்டங்களில் காணப்படுகின்றது.
- இவ் இயல்பூக்கங்களின் இலட்சணங்கள் முதிர்ச்சியடைந்துவரும் பொழுதே விளங்கிக்கொள்ளமுடியும். இயல்பூக்கங்கள் முதிர்ச்சியடையும் வரை மறைந்திருக்கும்.
- அவை முதிர்ச்சியடைந்தாலும் சூழல் தூண்டுதலைக் அளிக்கவிட்டால் அவை மறைந்ததே காணப்படும்
- இயல்பூக்கங்கள் கற்றலினல் ஏற்படுவதில்லை.

மக்டுகல் 14 இயல்பூக்கங்களைக் வெளிடுவதோடு அது தொடர்பான பொருள்கள் மனவெழுச்சிகளையும் தொழிற்பாடுகளையும் தருகின்றார்.

| | இயல்பூக்கங்கள் | பொருள் | மனவெழுச்சி | தொழிற்பாடு |
|---|---|---|---|---|
| 1. | ஒதுக்கலுக்கம் | பயங்கர சம்பவம் | அச்சம்பீதி | ஓடுதல் |
| 2. | போரூக்கம் | ஆபத்து | கோபம் | எதிர்த்தல் |
| 3. | மகவூக்கம் | பிள்ளைகள் | அன்புஆதரவு | பராபரித்தல் |
| 4. | உணவுதேடூக்கம் | உணவு | பசி | உண்ணுதல் |
| 5. | ஆராய்வூக்கம் | பொருட்கள் | ஆச்சரியம் | புலக்காட்சி பெறுதல் |
| 6. | வெறுப்பூக்கம் | விரும்பாத பொருட்கள் | பொறுப்பு | விலகுதல் |
| 7. | திரட்டூக்கம் | பொருட்கள் உடமை பணம் | | திரட்டுதல் |
| 8. | பாலூக்கம் | எதிர்ப் பாலகர் | காதல் காமம் | கூடல் |
| 9. | பணிப்பூக்கம் | வலியோர் | தாழ்வுணர்வு | பின்பற்றல் |
| 10. | தன்னெடுப்பூக்கம் | நாள் | மேம்பாட்டுணர்வு | ஆதிக்கம் செலுத்தல் |
| 11. | சிரிப்பூக்கம் | அசாதாரண நிலை | மகிழ்ச்சி | சிரித்தல் |
| 12. | தண்ணிழிவூக்கம் | நான் | ஆதரவின்மை | அழுதல் முறையிடுதல் |
| 13. | குழுவூக்கம் | ஒத்த இயல்புடையவர்கள் | சமூகக் காப்பு | குழுச்செயல்கள் |
| 14. | ஆக்கவூக்கம் | பொருட்கள் | படைப்புணர்ச்சி | ஆக்குதல் |

இவ் அட்டவணையில் காட்டப்பட்ட இயல்பூக்கங்கள் பொருட்கள் மனவெழுச்சிகள் தொழிற்பாடுகள் என்பவற்றைத் தெரிந்திருப்பதோடு அவற்றை வகுப்பறையில் ஊக்கலுக்காக பயன்படுத்தும் முறைகளையும் அறிந்திருக்கவேண்டும். முதலில் ஆசிரியர் அறிய வேண்டியது இவ் இயல்பூக்க கொள்கையைக் வெளியிட்டவர் மக்டூகல் மட்டுமல்ல என்பதாகும். சிறில் பேட் இயல்பூக்க கொள்கையை ஆதரித்து கூறியவற்றைக் அறிந்து கொள்வதும் முக்கியமானதாகும், சிறில்பேட் இவ் இயல்பூக்கங்கள் பரம்பரையானது என்பதைக் ஏற்றுக் கொண்டதோடு சிக்கல்வாய்ந்தவை என்பதையும் ஏற்றுக் கொண்டார். அத்துடன் புலக்காட்சி பெறுவதற்கு தேவையான ஊக்கங்களை இயல்பூக்கங்கள் வழங்குகின்றன என்றார்.

உண்ணுதல், அச்சம், பீதி எதிர்த்தல், பாலூக்கம், ஆகிய இயல்பூக்கங்கள் முழுவதற்கும் உலகம் எக்காலத்திலும் உண்மையானவையாகும் என சிறில் பேட் கூறினர். கிளேன்பேர்க் என்பரின் கருத்துப்படி மக்கேனின் இயல்பூக்க கொள்கை உலகின் எல்லாப் பகுதியிலும் காணப்படுவதில்லை சில நாடோடிக் கூட்டத்தினருக்கு பாலூக்கம் கிடையாது அதே மாதிரியாக மிருகங்களின் மீது செய்யப்பட்ட ஆய்வு மனிதர்களுக்கு தொடர்புகள் இல்லையெனக் கூறுகின்றார். எத்தனை இயல்பூக்கங்கள் உண்டு என்பது பற்றி சர்ச்சைகள் உண்டு.



மக்டுகள் கொள்கையை பின்பற்றும் சிலர் 6000 இயல்பூக்கங்களைக் கொண்ட அட்டவணையை வெளியிட்டார்கள். ஆயினும் இவ்வட்டணைகள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை ஆனல் அவற்றுள் சில முக்கிய இயல்பூக்கங்கள் கலந்துரையாடப்படுகிறது. எனவே எமது கவனம் பெருமளவுக்கு மக்டூகல் மீதே செலுத்தப்படுகின்றது. இயல்பூக்கங்கள் எவ்வாறு கற்றலுக்கு ஊக்கமளிக்கிறது என்பதைக் கண்டறிதல் அடுத்து முக்கியமானதாகும். மக்டூகளின் ஆராய்பூக்கம் கற்றலுக்கு ஊக்கமளிக்க நீங்கள் பயன்படுத்தலாம். ஆராய்வூக்கத்தினல் தொழிற்படுகின்ற ஒருவர் எதனையும் கண்டறிய அதிக ஆர்வமுடையவராவர். அப்படியான ஒருவர் முழு விளக்கத்தையும் பெறும்மட்டும் திருப்தியடையமாட்டார். அவர் முழு விளக்கத்தை அல்லது புலக்காட்சியை பெறவேண்டும் நீங்கள் ஆராய்வூக்கத்தின் உச்ச பயன்பாட்டைப் பெற முயற்சிக்க வேண்டும். இது இலக்கிய விஞ்ஞான சமூகக் கல்விப் பாடங்கள் எல்லாவற்றுக்கும் பயன்படுத்தக் கூடியதாகும். விஞ்ஞான முறை கற்பித்தலுக்கு முதலாவது படி

சாதாரணமாக அவதானித்தலும் ஆயத்தப்படுத்தலு மாகும். இயல்பூக்க கொள்கையில் ஆராய்வூக்கம் இவை இரண்டையும் ஊக்குவிக்கின்றது. மறைந்தி ருக்கும் இயற்கையின் இரகசியங்களை கண்டறிய முற் படுவது எல்லாம் ஆராய்வூக்கத்தினுல் எழுந்ததாகும். இலக்கியத்தினை நயத்தால் கவின்கலைகளை இரசித்தல் ஆகியனவும் ஆராய்வூக்கத்தினுல் ஏற்பட்டதாகும். அதிலிருந்து மக்டுகளின் ஆராய்வூக்கம் எல்லாப் பாடங்களுக்கும் பொருத்தமானது.

ஆக்கவூக்கத்தைப்பற்றி சிந்திக்கவும், ஆக்க முயற்சி யானது கல்வியில் பெரிதும் வேண்டப்படுவதாகும். புதிதாக ஆக்கங்களை மேற்கொள்ளும் திறனைக் குறிக் கும் அதன் விளைவாக உலகத்தின் வளர்ச்சி ஏற் படுத்தி நவீன பொருட்களை உற்பத்தியாக்கவும் விஞ் ஞான தொழில் நுட்பங்கள் விருத்தியடையவும் காரண மாகின்றது. பிள்ளைகளின் ஆரம்ப வயதில் ஆக்கபூக் கத்தை எழுச்சி பெறச் செய்ய ஊக்கத்தையும் உதவி யையும் அளிப்பது அப்பிள்ளையினதும் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் உதவியாக அமையும் குழுவூக்கத்தினுல் பிள்ளைகளிடம் நல்ல தீய செயல்களை வளர்க்க முடியும் ஏனெனில் குழுவூக்கம் அழிவுகளின் ஈடுபடுவதற்கும் குற்றவியல் குற்றங்களை மேற்கொள்ளவும் மறைமுக மாக அழிவுகளில் ஈடுபடவும் காரணமாகின்றது. எனவே இந்த குழுவூக்கத்தை பயனுள்ள தொழிற் பாடுகளில் பிள்ளைகளை ஈடுபடுத்தல் உமது பொறுப் பாகும் குழுவூக்கமானது சமுதாயத்துக்கு பயன்தரக் கூடிய சங்கங்கள், சபைகள், கழகங்களை அமைப்பதற் கும் செயல்படுத்தவும் பயனுடையதாகும். கல்வித் துறையில் கல்விச் சுற்றுலாக்களுக்கும் குழுவூக்கத்தைப் பயன்படுத்தலாம். குழுக்களாக கற்கும் முறைக்கும், உதவி தேவைப்படுபவர்களுக்கும் சமுதாய சேவை களை மேற்கொள்வதற்கும் குழுவூக்கத்தைப் பயன் படுத்தலாம்.

தாழ்வு மனப்பான்மையுடைய பிள்ளைகளையும் தன் னெடுப்புடைய பிள்ளைகளையும் விளங்கிக்கொள்வதற்கும் அவர்களை அதிலிருந்து விடுவிக்கக்கூடிய பொருத்தமான ஊக்கங்களை தெரிவுசெய்வதற்கும், இயல்பூக்கங்களைப் பயன்படுத்தவேண்டும். தாழ்வு மனப்பான்மையுடைய பிள்ளைகளை சில திறமைகள் காணப்படுவதை அவர் களுக்கு எடுத்துக்காட்டி ஊக்கமளிக்கவேண்டும். அவர் களிடம் அதனுல் சுயநம்பிக்கையை உருவாக்கவேண் டும். எல்லாப் பிள்ளைகளுக்கும் பொறுப்புகளையும் தலை மைத்துவத்தையும் எவ் பிள்ளைகளையும் ஒதுக்காமல்

வழங்குவதால் பிள்ளைகளிடம் சம நிலையை ஏற்படுத்த லாம் திரட்டுக்கத்தை நல்ல திருப்தியான கற்றலுக்கு ஊக்கமளிப்பதற்கு பயன்படுத்தலாம்.

திரட்டுக்கம் பயனுள்ள ஓய்வினை ஏற்படுத்தவும், சிறந்த வளமுள்ள கற்றலை ஏற்படுத்தவும் பயன்படுத்தலாம். முத்திரை சேர்த்தல் சிறந்த முக்கியமான கட்டுரைகளைப் பத்திரிகைகளிலிருந்து சேகரித்தல் புவி இயலுக்கு தேவையான சாதனங்களைச் சேகரித்தல் விஞ்ஞானம் கற்றலுக்குரிய சாதனங்களை சேகரித்தல் நாணயம் போன்ற வரலாற்று முக்கியத்துவமுடைய பொருட்களை சேகரித்தல் ஆகியன போன்ற பயனுள்ள செயற்பாடுகளுக்கு இத் திரட்டுக்கத்தைப் பயன்படுத்தலாம்.

**தேவைக் கொள்கை**

மனித நடத்தைகளை ஊக்கப்படுத்தும் விசைகள் யாவை என மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக உளவியல் தேவைகள்பற்றி பல கொள்கைகள் உருவாகியுள்ளன. மக்டுகல் பிறப்பிலிருந்து பரம்பரை இயல்பூக்கள் மனித நடத்தைகளை ஊக்கும் விசைகள் என முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்ட கொள்கையினைப்போல், தேவைக் கொள்கையினை ஆதரிப்பவர்கள். உளவியல் தேவைபற்றி அட்டவணை தயாரித்துள்ளனர். அத்துடன் அவை எவ்வாறு ஊக்கல்மீது செல்வாக்கு செலுத்துகின்றன என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளனர்.


நெறி பிறழ்ந்த பிள்ளைகள் மீது, டபிள்யூ. ஐ. தோமஸ் 1922ல் நெறிபிறழ்ந்த பிள்ளைகள் மீது மேற்கொண்ட ஆய்விலிருந்து தேவைக் கொள்கை உதயமாயிற்று. மறே, குரன்பார்க், மக்லேன் ஆகியோர் மனிதத்தேவைகள் பற்றிய அட்டவணை வெளியிட்டனர். ஆனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மிகப் பிரபல்யம் வாய்ந்த கொள்கை 1954ல் வெளியிடப்பட்ட ஏ. எச். மாஸ்லோவினது தேவைக் கொள்கையாகும். மறெயினது தேவைக் கொள்கையில் உள்ள அட்டவணை 27 தேவைகளை உள்ளடக்கும் அவற்றில் சில உள நிறைவுத்தேவை, கீழ்ப்படிவுத் தேவை, பேறுத் தேவை எதிர்த்தல்தேவை, ஆக்கத்தேவை, சுதந்திரத்தேவை, தலைமைத்துவத் தேவை, பாலியல் தேவை, புலக் காட்சித்தேவை, என்பனவாகும். மறேயினால் தேவைகள் என இனங் காணப்பட்ட பெரும்பாலான தேவைகள் தோண்டையிற்னால் இயல்பூக்கங்களாக இனங்காணப்பட்டது அல்லது மறே கூறிய தேவைகள் தோண்டையிற்னால் கூறப்பட்ட இயல்

பூக்கங்களின் தொழிற்பாடுகளுடன் தொடாபுடையன.

குரோன் பார்க் தேவை ஒழுங்கமைப்பு ஒன்றினை வெளியிட்டார்.

- அன்புத் தேவை
- மேலதிகாரிகளின் அங்கீகரிப்புத் தேவை
- சமவயதுக்குழுவினுல் ஏற்றுக்கொள்ளப்படும் தேவை
- சுதந்திரமாக இயங்கும் தேவை
- தன்மதிப்புத் தேவை

உளவியல் தேவைகள் எவ்வாறு ஊக்கல் மீது செல்வாக்கு செலுத்துகின்றது என்பதில் கவனம் செலுத்தும் போது நாம் மாஸ்லோவின் தேவைக்கொள்கையைக் கவனிக்கவேண்டும்.



கீழே தரப்பட்டுள்ள அவரால் கூறப்படும் மனித தேவைகளாகும். இவை படிமுறை அமைப்பில் நிரற்படுத்தியுள்ளார்.

- உடலியல் தேவை
- காப்புத் தேவை
- அன்பு உறவுத் தேவை
- கணிப்புத் தேவை
- சுய திறனியல் நிறைவுத் தேவை

மேலே கூறியவற்றுக்கு மேலாக தெரிவதற்கும் விளக்கம் பெறுவதற்குமான பலமான நாட்டமும் தேவையாகும். இத் தேவைகளில் படிமுறை அமைப்பு காணப்படுகின்றன. அதன் கருத்து தேவைகளின் வலிமையைக் பொறுத்து நிவர்த்தி செய்யப்படுகின்றன- அதன்படி உடலியல் தேவைகள் நிறைவுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக பல நாட்களாக பட்டினியால்வாடும் ஒருவனது பசி தனியும் வரை அவன் காப்புத் தேவை பற்றியே அன்புத்தேவை பற்றியோ கணிப்புத் தேவை பற்றியோ கவனிக்கமாட்டான். அவனது அடிப்படை உடலியற் தேவையைப் பூர்த்தி செய்வதே இரண்டு முக்கியமாகும். உடலியற் தேவை பூர்த்தி செய்யப்பட்டபின் அவன் காப்புத் தேவையில் கவ

னம் செலுத்துவான். நடைமுறையில் இவை எல்லா வற்றிலும் காப்புத்தேவையே மிக முக்கியமானதாக கருதுவான். காப்புத் தேவை பூர்த்தி செய்த பின், அன்பு உறவுத் தேவையில் கவனமும் அதன் பின் கணிப்புத் தேவையிலும் அதன் பின் சுய திறனியியல் நிறைவுத் தேவையிலும் கவனம் செலுத்துவான் தன் மதிப்புத் தேவையினுல் ஏற்படுத்தப்பட்டு திருப்தியா னது மற்றவர்களிடம் பெறும் கணிப்புத் தேவைகள் எல்லாம் பூர்த்தி செய்யப்பட்ட பின் இறுதியான சுய திறனியல் நிறைவுத் தேவையில் கவனம் செலுத்தப் படும். அது அவனது ஆகக் கூடிய திறமையினுலும் செல்வாக்கினுலும் பெறப்படுவதாகும். இது பின்வரும் கூற்றுக்கு பொருத்தமானது.

ஒருவன் வேறு ஒருவனுக வரமுடியுமா? அவன் அவனு கவே இருப்பான்'' சங்கீதவித்துவான் சங்கீதத்தைப் பாடவேண்டும். சித்திரக்காரன் சித்திரங்களை வரைய வேண்டும். புலவர் புகழ்பெற்ற கவிதைகளை பாட வேண்டும். விஞ்ஞானி பரிசோதனைகளை செய்து புது விடயங்களைக் கண்டறியவேண்டும். அவ்வண்ணமே ஒரு தனிப்பட்டவர் ஆக உயர்ந்த நிலையை தனது மறைந் துள்ள திறன்களில் அடையும் போது மற்றத் தேவை களின் வலிமையானது நீங்கிவிடும். இக் கொள்கையின் முக்கியத்துவம் யாதெனில் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டால் சிறந்த ஒரு சமுதாயம் உருவாக முடியும் எனவே பாடசாலையில் மாணவர்களை உருவாக்க முடியும். எனவே பாடசாலையில் மாணவர் களை ஊக்குவிக்கும்போது இத்தகைய தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டியது தவிர்க்க முடியா தென்பதை மனத்தில் கொள்ளவும்.

பாடசாலைகளில் பிள்ளைகளை கற்பதற்கு ஊக்கமளிக் கும்போது தேவைக் கொள்கை அதிக பயனுடைய தாக விளங்கும். இங்கு நீங்கள் தெரியவேண்டிய முக் கிய அம்சம் யாதெனில் பிள்ளைகளின் தேவைகள் ஆளுக்காள் வேறுபடுகின்றன. தனிப்பட்ட பிள்ளை களின் உளவியத் தேவைகளின் வேறுபாடுகளை விளங் கிக் கொள்வது ஊக்கலுக்கு தேவையான பொருத்த மான முறையைத் தெரிவு செய்ய உதவும். அதனைப் போல் உடலியல் தேவைகள் ஊக்கல் மீது செல்வாக்கு செலுத்துகின்றது என்பதை அறிதல் உங்களுக்கு உதவி யாக இருக்கும். அதனுல் நீங்கள் உணவு, பொழுது போக்கு தூய்மையான காற்று என்பன எவ்வளவு முக்கியத்துவமுடையது என அறிந்து கொள்வீர்கள்.

அன்பு, ஏற்றுக்கொள்ளல் ஆசிரியரின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளுதல் மனவெழுச்சிக் நெருக்கிடைகளிலிருந்து விடுபடுதல் என்பன ஊக்கல் மீது செல்வாக்கு செலுத்துகின்றது என்பது இக் கொள்கையிலுல் வெளிப்படுத்தப்படுகின்றது. அடைத் தேவை பேறுத் தேவை போன்ற உளவியல்த் தேவைகள் இவ்விடத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது. அவை வெவ்வேறு பாடங்கள் மூலம் இத் தேவைகள் பூர்த்தி செய்யப்படலாம். இப்பொழுது இயல்பூக்கக் கொள்கைகளில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைக் கவனிக்கவும் அதேபோல் பிள்ளைகளின் தேவைகளையும் கல்வி குறிக் கோள்களை எவ்வளவுக்கு இயைபாக்கம் செய்யலாம் என்பதற்கு இத் தேவைக் கொள்கை பயன்படும்? உடனடியாக குறிக்கோள்களை பிள்ளைகள் அடைவதற்கு இவ் தேவைகள் எந்தளவுக்கு ஊக்குவிக்க முடியும். எந்தளவுக்கு இத் தேவைகளை ஊக்குவிப்பதனுல் எதிர்காலத்தில் பயனுடையதாக இருக்கும் மேலே கூறிய இரண்டு கூற்றுகளையும் கவனிக்குக. குடும்பத்தின் பொருளாதார நிலை தொழில், சமுதாய நிலை வீடு என்பன யாவும் பிள்ளைகளின் தேவைகளோடு தொடர்புடையனவையாகும். அதனுல் உங்கள் தொழிலைச் சிறப்பாக செயலாற்றுவதற்கு ஒவ்வொரு பிள்ளைகளினதும் சமுதாய பொருளாதார நிலைமைகளை அறிந்திருத்தல் உதவியாக இருக்கும். இதிலும் உங்கள் கவனத்தைச் செலுத்துக.

இப்பொழுது நாங்கள் எமது கவனத்தைக் ஊக்கலின் இன்னெரு அம்சத்தின் மீது செலுத்துவோம். ஊக்கலில் காணப்படும் கொள்கைகளில் இது மிக உயர்ந்த மட்டத்தில் படுகின்றது.

**உளப் பகுப்புக் கொள்கை**

சிக்மன் பிரய்ட் என்பவரே (1856-1939) உளப்பகுப்புக் கொள்கையைக் அறிமுகப்படுத்தியவராவர். இவர் உள்ளத்தை மூன்று பிரிவுகளாக பிரித்தார். அவை நனவிலிநிலை, நனவடிநிலை, நனவுநிலை என்பனவாகும். உள்ளத்தின் பெரும்பகுதி நனவடி நிலையிலேயே காணப்படுகின்றது. உள்ளத்தின் சிறு பகுதியான பத்து வீதம் நனவடிநிலையிலும் நனவு நிலையில் காணப்படுகின்றது. இவர் இதனை சமுத்திரத்தில் மிதக்கும் பணிபாறைக்கு சமமானதாக ஒப்பிடுகின்ருர். நாங்கள் அப்பணிப் பாறையின் ஒரு சிறு பகுதியினையே காணமுடிகின்றது. பணிப்பாறையின் பெரும் பகுதியானது பார்க்க முடியாமல் நீரில் அமிழ்ந்திருக்கின்றது. அவ்வண்ணமாக் எண்ணங்கள் நனவடிநிலையில் அமிழ்ந்திருக்கின்றது.

அவை தனிப்பட்டவர்களின் நடத்தைகள் மீது செல் வாக்கு செலுத்துகின்றது. பெரும் தொகையான உணர்வுகள் குழந்தைப் பருவத்திலேயே நனவிரி நிலைக் குத் தள்ளப்பட்டு உள்ளத்தில் ஒடுக்கப்படுகின்றது. அவ்வண்ணமே ஒடுக்கப்பட்ட உணர்வுகள் காரணமாக விரக்தி ஏற்படுகின்றது. பெரும்பாலான இவ் உணர் வுகள் பாலியல் ஆசைகளும் வன்செயல்களுமாகும். ஒரு பக்கத்தில் அவை தூங்கும் எரிமலையையும் அமுக் கப்பட்ட கம்பிச் சுருள் போன்று நனவிலி உள்ளத் தில் அடக்கப்பட்டுள்ளது. அவை அடிக்கடி நனவு நிலைக்கு திரும்பி வரமுயன்று கொண்டிருக்கின்றனர்.

பிரயட்டின் கொள்கைப்படி மனிதர்களிடம் அதிக சக்தி வாய்ந்த ஊக்கல் காரணி சுய மகிழ்ச்சியை அடையும் விருப்பமாகும். இந்த உந்தல் பிறப்பிலே பெற்றுக் கொண்டதாகும். அதனை அவர் இட் (id) எனப் பெயரிட்டார். அவ்வண்ணமே எல்லாப் பக்கங் களில் மகிழ்ச்சியைத் தேடிச் செல்லும் விசையானது உந்துகை (Lipido) யினுல் வளம்படுத்தப்படுகின்றது.

மேற்பட்ட உந்தல் பூர்த்தி செய்வதற்கு சூழலிலும் சமுதாயத்திலும் தடைகள் காணப்படுகின்றன. அத் தடைகளை அகம் (ego) எனப் பெயரிட்டுள்ளார். ஆனுல் இவ் அகம் எப்பொழுதும் நல்லது நிலைப்பது எது என பிரித்தறிய முடியாது இருக்கின்றது. அவ ரது நடத்தைகளை எவ்வாறு அமைய வேண்டும் என் பது அவ்வவ் காலகட்டங்களில் தாய் தந்தையர்கள் முதியோர் வளர்ந்தோர் ஆசிரியர் சமுதாயக் குழுக்க ளால் நிர்ணயிக்கப்படுகிறது. இதனை அவ் அதி அகம் (Super ego) எனப் பெயரிட்டுள்ளார். அதி அகம் மறைந்துள்ள அதியான உந்தல்களை வெளிவராது தடை செய்கின்றது. எனினும் தனிபட்டவர் தனது உந்தல்களை அதி அகத்தினுல் தடை செய்யப்பட்ட போதும் இட் இனதும் அகத்தினது தேவைகள் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. அதற்கான தனித்துவமான சில வழிமுறைகளைக் கையாளுகின்றனர். அவரது கொள்கைக்கு எதிரான பல கருத்துக்கள் வெளியிடப் பட்டுள்ளது. ஆயினும் நாங்கள் இக்கொள்கையானது எவ்விதத்தில் கற்றலுக்கு ஊக்குவிப்பதோடு தொடர் புடைய என்பதை அறிய வேண்டியுள்ளது. பிராயட் முன் கொள்கைப்படி குழந்தைப் பருவமானது ஆளு மைவிருத்திக்கு அத்திவாரமாகின்றது. எனவே குழந் தைகளின் தேவைகள் எவை? அவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வினை பெறத் தடைகள் எவை? ஆசிரி யர் இக்கேள்விகளில் கவனம் செலுத்த வேண்டியுள் ளது.

பிராய்ட் கொள்கையில் பாலியல் முக்கிய பங்கு வகிக்கின்றது உணர்வுகள் ஒடுக்கப்படுதல் பிரச்சினைகளின் செல்வாக்கு செலுத்துகின்றன. ஆசிரியர் இவ்வுணர்வுகளைப் பொருத்தமான பகுதிகளுக்கு திசை திருப்ப வழிப்படுத்த வேண்டும். கலவன் பாடசாலை முறை இத்தேவைகளின் எண்ணங்களைத் திருத்திப்படுத்த உதவுகின்றது, அவ்வாறான கலவன் பாடசாலையில் ஆசிரியர் தவறான வழிகளில் செல்லாது அதி அகத்தைப் பொருத்துமாறு செய்துகொள்ள வேண்டும். பிராய்ட்டினால் முன்வைக்கப்பட்ட சுயகருத்துக்கள் (                ) ஊக்கங்களுக்கு முக்கியத்துவமுடைய ''நான் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும்'' என தன்னைத்தானே முன்மாதிரியாக அமைத்துக்கொள்ளல் அத்தகைய முன்மாதிரி பொருத்தமானதாக அமைய வேண்டும். அத்தகை இலட்சிய முன்மாதிரிக்குத் தேவையான கருத்துக்களை ஆசிரியர் அவர்களுக்கு வழங்க முனையவேண்டும். (இலட்சியங்கள் அறநெறி ஒழுக்கங்கள்) சரியான முறையில் ஊக்கப்படுத்தப்படாத பிள்ளைகளே நெறிபிறழ்ந்த பிள்ளைகளாக காணப்படுகின்றன என்பது இதனால் நிரூபிக்கப்படுகின்றது.

**பண்பாட்டுக் கோலக் கொள்கை**

நீயூகினித் தீவில் மாக்கிரட் மீட் என்பவரால் மேற்கொண்ட ஆய்வின் மூலம் இது நிரூபிக்கப்பட்டுள்ளது. இங்கு வாழும் அரபேஷ் (                ) இனம் மிகவும் நல்ல பண்பும் நடத்தையும் கொண்டவர்கள். அவர்கள் தமது பிள்ளைகளை அன்புடனும் பாசத்துடனும் வளர்க்கின்றனர். மொண்டுகுமோர் (                ) என்ற இன்னுமொரு இனம் அதே தீவில் வாழ்கின்றது, அவர்கள் பலதார மணம் புரிபவர்கள். பிள்ளைகளிடத்து எதுவித அன்பும் செலுத்துவதில்லை. பிள்ளைகளை ஏனையோருடன் சண்டையிடுமாறு ஊக்குவித்து வளர்க்கப்படுகின்றனர். இவர்கள் இவ்வாறு வேறுபட்ட முறையில் வகைப்படுவதால் அரபேஷ் மக்களின் பிள்ளைகள் அமைதியானவர்களாகவும் ஒழுங்கு கட்டுப்பாடுள்ளவர்களாகவும் வன்செயல் நடத்தையற்றவர்களாகவும் வாழ்கின்றனர். மொண்டுகுமோர் இனத்தின் பிள்ளைகள் சண்டைகளும் கொலைகளும் செய்பவர்களாகவும் சோம்பேறிகளாகவும் இருப்பார்கள். இவ் சமுதாய நிலைமைகள் பிள்ளைகளின் நடத்தைகளை உருவாக்கும் ஊக்கல்களாக மானிடவியலாளர்கள் கருதுகின்றனர்.

பண்பாட்டுக் கோலக் கொள்கையானது மாக்கிரட் மீட் குத் ஆகிய இரு சமூக மானிடவியலாளர்களின் கருத்துக்கள் கல்வி உளவியலில் உட்புகுந்துள்ளது. அவர்கள் ஆய்வின் மூலம் குழந்தைப்பருவத்தில் காணப்படும் சூழலின் ஊக்கங்கள் அவர்கள் வளர்ந்தோர்களாகி மேற்கொள்ளும் நடத்தைகளில் பலமான செல்வாக்கினை செலுத்துகின்றது. தேவையான காலத்தில் அன்பு, பாசம், என்பவற்றைப் பெற்று தாயினுல் பராமரிக்கப்பட்டும் பொருத்தமான முறையில் ஊக்கமளிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட பிள்ளைகள் பொதுவாக, தியாக சிந்தையுள்ளவர்களாகவும், சுயநலமற்றவர்களாகவும் ஒழுங்கு கட்டுப்பாடுள்ளவர்களாகவும் காணப்படுவர். ஆனுல் பிள்ளைகளை கடும் தண்டனைகளுக்குள்ளாக்கியும் அன்பு செலுத்தாமலும் போதிய கண்காணிப்பில்லாமலும் குறிப்பிட்ட இனத்தில் வளர்க்கப்பட்ட பிள்ளைகள் நாணய மற்றவர்களாகவும் சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கலாசாரத்தில் உபகலாச்சாரம் ஒன்றைப் பின்பற்றுவார்களாகவும் காணப்படுகின்றனர். அத்துடன் அவர்களது கற்றல். ஊக்கல் என்பவற்றின் மீது மாதிரிகளின் இலட்சணங்கள். கல்வி தொழில் சமயம், பாலியல் என்பவற்றிலிருந்து உருவாகலாம். உப கலாச்சார இலட்சணங்களிலிருந்து கல்வி நடத்தைகள் வாழ்க்கைமுறை கற்றல் என்பவற்றைப் பற்றிய கருத்துக்கள் மாற்றமடையும்.

உயர் வகுப்பு மத்தியதர வகுப்பு, தாழ் வகுப்பு ஆகிய ஒவ்வொன்றில் கல்வி பற்றிய கருத்துக்கள் ஒன்றுபட்டனவாக அமையாது. அதனுல் அவ்வாருன உபகலாச்சாரங்களிலிருந்து வரும் பிள்ளைகளைக் கொண்ட ஒரு வகுப்பறையில் கல்வி பற்றிய ஊக்கங்கள் ஒரே மாதிரி அமைய மாட்டாது. ஒரு உபகலாச்சாரத்திலிருந்து வரும் பிள்ளைகள் ஆங்கிலக் கல்வி முக்கியமென கருதுவர். ஆனுல் மற்றவர்கள் அவ்வாறு சிந்திக்க மாட்டார்கள். ஆனுல் உயர் கல்வியினைத் தொடரும்போது ஆங்கிலம் முக்கியமற்றது என கருதிய உபகலாச்சாரத்தைக் சேர்ந்த பிள்ளைகள் பல தடைகளை எதிர்நோக்குவர். இறுதியாக இது தொடர்ந்து கல்விக்கான ஊக்கிகளுக்கு தடையாக அமையும் இது இறுதியாக கல்வியிலிருந்து பிள்ளைகளை வெளியேற்றுகின்றது.

சமுதாயச் சூழலும் ஊக்கங்கள் மீது செல்வாக்கு செலுத்துகின்றது. இது ஜோன் போல்வி என்பவரின் பரிசோதனை மூலம் நிரூபிக்கப்படுகிறது. அநாதை இல்லங்களில் வளர்க்கப்பட்ட பிள்ளைகள் அவர்களது ஆரம்ப வயதிலிருந்தே சமூகவிரோதச் செயல்களுக்கும் அநீதியான செயல்களுக்கும் பலமாக ஊக்குவிக்க பட்டிருந்தனர். அதே மாதிரி ஆரம்ப வயதில் தாய் தந்தை

யர்களை இழத்தல், தாய் தந்தையார்கள் விவாகரத்துச் செய்து கொள்ளல் குடும்பத்தில் தகராறுகள் இடம் பெறல் குடும்பத்தில் மகிழ்ச்சியற்ற நிலை சிறிய சமூதா யத்தில் வாழ்தல் வளமற்ற சூழல் கோபமூட்டும் ஆசிரி யர்கள். பொருத்தப்பாடற்ற ஆசிரியர்கள் என்பவர்களு டன் ஏற்படும் தொடர்புகள் ஆகிய சமுதாயகாரர்க ளின் பிள்ளைகளின் நடத்தைத் தன்மைகளில் மாற்றத் தை ஏற்படுத்தும் அத்துடன் கற்றலுக்கான ஊக்கலுக்கு தடைகளையும் ஏற்படுத்தும். அத்தகைய சூழலிலிருந்து வரும் பிள்ளைகள் சோம்பேரிகளாகவும் விரக்தியுள்ள வர்களாகவும் விருப்பற்றவர்களாகவும் மெல்லக் கற்ப வர்களாகவும் காணப்படுவர். அத்தகைய பிள்ளைகளுக்கு வகுப்பறையில் பொருத்தமான சமூக சூழலை உரு வாக்குதல் அவசியமாகும். அவர்கள் உங்களது அன்பு கணிப்பு இரக்கம், என்பன மிகவும் தேவைப்படுகின் றது. அத்தகைய பிள்ளைகளுக்கு பத்திரிகைகள் வானொ லி தொலைக் காட்சி ஆகியவற்றின் மூலம் வெகுசனத் தொடர்புகளை ஏற்படுத்திக் கற்றலின் அவர்களிடம் காணும் குறைபாடுகள் நீக்கப்பட வேண்டும்.

பிள்ளைகள் பழகும் சமவயதுக் குழுவின் மனப்பாங்கு நம்பிக்கை என்பன கற்றலுக்கான ஊக்கல்களில் செல் வாக்கு செலுத்துகின்றன. கற்றலுக்கு ஊக்கத்தை அளிக்கும் ஏனைய காரணிகள் நன்பர்குழு விளையாட் டுக்குழு சிறிய சமூகங்கள் உறவினர்கள் வீடு என்ப வையாகும். அதனால் கற்றலுக்கு ஊக்கல்களை அளிக் கும்போது சமுதாய கொள்கைகளும் கருத்துக்கு எடுத் துக் கொள்ள வேண்டும். பிள்ளைகளுக்கு கற்றலை ஊக்க மளிக்கும் போது பிள்ளையின் தனித்தன்மைகளை மட்டு மல்லாது சமூகத் தொடர்புகளையும் வீட்டு நிலைமை களையும் முழுச் சமுதாயத்தொடர்புகளையும் வெகுசனத் தொடர்புச் சாதனங்களின் செல்வாக்குகளையும் கற்ற லுக்கு வீட்டிலிருந்தும் வெளிச்சமுதாயத்திலிருந்தும் பெறும் நன்மைகளையும் சமூக பொருளாதார நிலைமை களையும் உபகலாச்சாரத்தின் இலட்சனங்களையும் கவனத் துக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். பொருத்தமான நுட்ப முறைகளை தெரிவு செய்து ஊக்கலுக்கு பயன் படுத்த வேண்டும்.

இம்மொடியூலில் நீங்கள் கற்ற விடயங்களை விளங்கிக் கொண்டீர்கள் என்பதை உறுதிப்படுத்த செவ்வை பார்த்தல் 3 உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

**செவ்வை பார்த்தல் 3**

கீழே தரப்பட்டுள்ள கேள்விகளுக்கு தரப்பட்ட விடைகளில் சரியானதின் கீழ் கோடிடுக.

1. தேவைக் கொள்கையில் வலிமைக்கேற்ப படிமுறை அமைப்பில் காணப்படுகின்றது என்பதைக் கூறியவர்.

   i குரேன் பார்க் ii மறே
   iii மார்லோ iv துறில் பேட்

2. மக்டுகலின்படி கொள்கைப்படி மனவெழுச்சி என்பது குறிப்பிட்ட நிலைமையில்

   i தொழிற்படுவதற்கான உந்தல்
   ii மனவெழுச்சிக் குழப்பத்தின் விளைவு
   iii எப்பொருள்களை பற்றியும் புலக்காட்சி பெறுதல்.
   iv பிரதிக்கிரிகை

3. இயல்பூக்க கொள்கை என்பது.

   i பரம்பரையினுல் பெற்ற இலட்சணங்கள்.
   ii கற்றலினுல் ஏற்படும் விளைவு
   iii பிரதிக்கிரிகை
   iv ஊக்கல்

4. பரம்பரையின் இலட்சணங்களில் ஒன்றுன ஆராவுக்கதிரினுல் ஏற்படும் தொழிற்பாடு

   i புலக்காட்சியும் தொழிற்பாடும்
   ii அதிகாரம்
   iii வளர்த்தல்
   iv கைவிடுதல்

5. சிக்மன்பிரெயிட்டின் கற்பித்தலின்படி எது பொருத்தமற்ற கூற்று.

   i நனவிலி மனத்திலுள்ள விருப்பங்கள் மனித நடத்தையில் செல்வாக்கு செலுத்துகின்றன.
   ii நனவிலி மனத்திலுள்ள விருப்பங்களில் பெரும்பாலானவை ஒடுக்கப்பட்டவை
   iii நனவிலி மனத்திலுள்ள விருப்பங்களில் பெரும்பாலானவை வளர்த்த பின் வெளிப்படுகின்றன.
   iv ஒடுக்கப்பட்ட உணர்வுகளினுல் விரக்தி தோன்றுகின்றது.

6. பிரொயிட்டின் கொள்கைப்படி மனிதனுக்கு ஊக்கலை அளிக்கும் பிரதான காரணி

i சுய மகிழ்ச்சியினை அடைதல்

ii பசியினை போக்குதல்

iii கணிப்பினை எதிர்பார்த்தல்

iv எதிர்த்தலை விரும்புதல்

உங்கள் விடைகளை இம் மொடியூலின் இறுதியில் தரப்பட்டுள்ள விடைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

இப்பொழுது நீங்கள் ஊக்கல் என்பது என்ன என தெரிந்து கொண்டுள்ளீர்கள். அவ்விடயங்களை விளங்கிக் கொண்ட உங்களுக்கு உங்கள் தொழிலைச் சிறப்பாக செய்ய முடியும். உமது தொழிலின் திறமையைப் பெறுவதற்கு உதவுவதாக அமையும் அதனல் நாம் இதற்காக கற்றலின் ஈடுபடுவோரும் இத்தொழிற்பாட்டில் ஈடுபட்டிருக்கும் போது நீங்கள் ஊக்கல்களின் மீது செல்வாக்கு செலுத்தும் காரணிகளை இனங் காண்பீர்கள்.

பகுதி IV

## 6.0 ஊக்கமளித்தலில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்

நாங்கள் இப்பொழுது, ஊக்கமளித்தலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் அறிந்து கொள்வதற்கு பின் வரும் தொழிற்பாட்டினை மேற்கொள்வோம்.

தொழிற்பாடு 4

நீங்கள் கற்பிக்கும் வகுப்பு அல்லது நீங்கள் பொறுப்பாக இருக்கும் வகுப்பு அல்லது வேறு ஒரு வகுப்பினைத் தெரிவு செய்க.

ஒரு கிழமைக்குள் எல்லாப்பாடங்களிலும், செயல் பாடுகளிலும் பிள்ளைகளை அவதானிக்கவும் பிள்ளைகளால் காட்டப்பட்ட விருப்பங்களையும் உடல், உளச் சோர்வுகளையும் அவதானிக்குக.

சோர்வுக்கும் விருப்பத்துக்கும் காரணமானவற்றை அட்டவணைபடுத்துக.

இதன் பிற்பாடு ஊக்கங்கள் மீது செல்வாக்கு செலுத்தும் காரணிகள் சில தரப்படுகின்கின. அவற்றை மனதில் கொண்டு அவற்றை கவனமாக வாசித்து விளங்கி கற்றல் சூழ்நிலையில் அவற்றைப் பயன்படுத்துக.

**முதிர்ச்சி**

மொடியூல் 120110ல் பரம்பரையும் சூழல் பற்றி கற்கும் போது இவ் விடயங்கள் உங்களுக்கு தெரிந்திருக்கும்.

பிள்ளைகள் வளர்ச்சி முதிர்ச்சியினாலும் கற்றலினாலும் செல்வாக்கு செலுத்தப்படுகின்றது. பிள்ளையின் இயற்கை வளர்ச்சியானது உடல் ரீதியாகவே நடை பெறுகின்றது. அதனை முதிர்ச்சி என இனங்காண முடியும் பிள்ளைக்கு பொருத்தமான முதிர்ச்சி ஏற் பட்டாலே ஒளிய ஊக்கமளித்தலைக் ஏற்படுத்த முடி யாது. குழந்தையானது நடப்பதற்கு எந்த வழியாலும் ஊக்கமளிக்க முடியாது அதற்கு காரணம் குழந்தையின் தசை நார்கள் முதிர்ச்சிடையாமையாகும்.

எனவே அவ் முதிர்ச்சி நிலை அடையும் வரை பொறுத் திருக்க வேண்டும். அதே போல் பிள்ளையானது முறை சார்ந்த கல்வியினைப் பெறும் தகுதியான முதிர்ச்சிய டைய முன் பெற்றோர்கள் கற்பிக்க முயற்சித்தல் மடைமைத்தனமாகும். இவ்விடயத்தில் கலாநிதி ஆரோர்டு கெசல் மேற்கொண்ட ஆய்வு கீழே தரப்ப டுகின்றது. அவர், 46 கிழமைகளை வயதாகக் கொண்ட ஒத்த இரட்டைகளின் இரு குழுக்களை தெரிவு செய் தார். அவர் ஒரு குழுவுக்கு ஆறு கிழமைகள் படியே றுவதற்கு பயிற்சி அளிக்கப்பட்டது. அதன் பின் அவருக்கு இரண்டு கிழமையில் மற்றக் குழுவினரைப் பயிற்ற முடிந்தது. அதற்கு காரணம் இரண்டாவது குழு தேவையான முதிர்ச்சியை ஆறு கிழமையில் பெற்றுவிட்டதாகும். முதிர்ச்சியடைய முன் பிள்ளை களை கற்றலுக்கு ஊக்கமளிப்பது அவர்கள் கற்றலில் வெறுப்படைய நேரிடலாம். இன்னொரு ஆராய்வின் போது ஒரு வயதுடைய பிள்ளைகளின் குழுவை மூன்று சில்லு வண்டியை ஓட்டுமாறு வற்புறுத்தப்பட்டனர். அதற்குப் பின் அவர்கள் மூன்று சில்லு வண்டியை ஓட் டக்கூடிய வயதை அடைந்தபோதும் அவர்கள் அதனைச் செய்ய வெறுப்படைந்தனர்.

**நுண்மதி**

கல்விக்கு ஊக்கமளிப்பதில் நுண்மதி முக்கிய காரணியா கும். கற்றலில் செல்வாக்கு செலுத்தும் நுண்மதி வேறு பட்ட நிலைகளில் வேறுபட்ட மட்டங்களில் நிர்மாணிக் கப்படுகின்றது. நுண்மதி மட்டம், நுண்மதிப் பரீட்சை கள் நடாத்தி பெற்ற புள்ளிகளால் கேட்டறியலாம். (நுண்மதிபற்றி மொடியூலிருந்து மேலும் விடயங்களைப் பெற்றுக்கொள்ளலாம்) உயர்ந்த நுண்மதியுள்ள மாண வன் கற்றல் தொழில்பாடுகளுக்கு விரைவாக ஊக்க மளிக்கமுடியும். ஆனால் உயர்ந்த நுண்மதியுள்ள பிள்ளை விரைவாக கற்பான் என உறுதியாகக்கூறமுடியாது. ஏனெனில் ஊக்கத்தை அளிக்கும் ஏனைய காரணிகள் இவ்விடத்தில் செல்வாக்கு செலுத்தலாம்.

**அவதானம்** எல்லா வகைத் தொழிற்பாடுகளிலும் நனவு நிலையிலும் அவதானம் அவசியமாகும். எமது நனவு நிலையில் எத்தொழில்பாடுகளுக்கும், உணர்வுகளுக்கும் முன் அவதானத்தைச் செலுத்துகின்றோம். இதன்படி எமது நனவுநிலை உள்ளத்தில் சில செயல்பாட்டுக்கோ, பொருளுக்கு நாட சம்மதிக்கின்றோம் என்பதாகும். அல்லாவிடின் சில குறி இலக்குகள் மீது அதிக கவனம் செலுத்தப் படுகின்றது. மிகச்சிறந்த உதாரணமானது கீழைத்தேச சமயத்தில் காணப்படும் தியானித்தல் ஆகும். குறிக்கோள்கள் சிதறியிருந்தால், கற்றலுக்கு ஊக்கத்தை அளிப்பது இலகுவானதல்ல. என்பதை நாம் அனுபவத்தினூடாக அறிந்துள்ளோம். இதனை ஒரு இலகுவான உதாரணத்தினால் உறுதிப்படுத்த முடியும். விரைவாக ஓடும் புகையிரதத்தில் நீங்கள் அமர்ந்திருந்து மிகப்பிடித்த ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கின்றீர்களென வைத்துக் கொள்வோம். அப்பொழுது நீங்கள் புகைவண்டியின் சத்தத்தையோ சக பிரயாணிகள் எழுப்பும் சத்தத்தையோ கேட்க மாட்டீர்கள். காரணம் உங்கள் அவதானம் முழுவதும் புத்தகத்திலேயே செலுத்தப்பட்டிருப்பதாகும். அவதானத்தில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் சில தரப்படுகின்றன.

செறிவு அல்லது கூர்மை

எமது எண்ணங்கள் மிகவும் பிரகாசமான வெளிச்சத்தையுடைய காருக்குச் சமமானதாகும். இவை வெளிச்சமற்ற காருக்குச் சமனில்லை பேசும்போது மிகவும் உரத்துப் பேசுவதே மிகவும் பொருத்தமானதாகும்.

வடிவம்

மிகவும் சிறிய பொருட்களுக்குள் காணப்படும் பெரிய பொருட்கள் எமது கவனத்தை ஈக்கவல்லன சிறிய யந்துக்கள் மத்தியில் காணப்படும் யானை எமது மனதில் ஆளமாகப் பதியத்தக்கன.

திரும்பச் செய்தல்

எமது எண்ணங்கள் மணிக்கூட்டின் ஓசைகளிற் செலுத்தப்படுவதன் காரணம் அம்மணி ஓசையானது மீண்டும் மீண்டும் நிகழ்வதால் ஒலிபரப்புச்சேவையில் வர்த்தக விளம்பரங்கள் திரும்பத்திரும்ப நடைபெறும் போது எமது கவனம் அதில் ஈர்க்கப்படுகின்றது.

மாற்றம்

சுவர்க் கடிகாரமானது வேலைசெய்யாது திடீரென நிற்கும் போது எமது கவனம் அதிற் செலுத்தப் படுகின்றது. பேச்சாளன் ஒருவர் மிகவும் வேகமாகப் பேசியதன் பின்னர் திடீரென நிற்பாட்டி பின்னர் வேறு ஒரு குரலில் பேசும் போது எமது கவனம் அங்கு ஈர்க்கப்படுகின்றது.

அசைவு

அசையும் பொருட்கள் அசையாத பொருட்களிலும் பார்க்கக்கூடிய கவனத்தை ஈர்க்கின்றன. இடைவிட்டு விட்டு ஒழிரும் வெளிச்சங்கள் எமது கவனத்தை ஈர்க்கின்றன.

மாறுமியல்பு

வெள்ளைச்சேலை அணிந்த ஒரு ஆசிரியரின் சேலையில் கறுப்பு நிறமான மை காணப்படுமாயின் எமது கவனம் அதில் ஈர்க்கப்படுகின்றன. மிகவும் உயரமான மனிதனின் அண்மையில் மிகவும் குறுகிய ஒரு மனிதனை கானும் போது எமது கவனம் அதில் ஈர்க்கப்படுகின்றது.

நவீனமானவை

புதிய நாகரிகங்கள் ஏனையவர்கள் கவரப்படுவதன் காரணம் அதனாலேயே ஒரு ஆசிரியர் மேற்கத்தைய உடையான நீளக்காட்சட்டை சேட் அணிந்த பின்னர் தேசிய உடையை உடனடியாகமாற்றும் போது ஈர்க்கப்படுகின்றது. கற்பதற்குத் தூண்டும்போது மேற்கூறியவற்றைக் கவனத்திற்கொண்டு கற்பித்தலை மேற்கொண்டால் கற்றலானது மிகவும் திருப்தியானதாக அமையும். சில விடயங்களுக்குரிய உப காரணங்களும் கற்றலைத் தூண்டுவதற்கும் கவனத்தை ஈர்ப்பதற்குப் பயன்படுகின்றன.

பரம்பரைக் காரணிகள்

பசியாக உள்ள பிள்ளையானது பெரும்பாலும் உணவிலேதான் கவனத்தைச் செலுத்தும் வேலைசெய்துகொண்டிருக்கும் தாயானவள் தனது மகன் தொடர்ந்து நோய்வாய்ப்படும்போது தனது வேலையைவிட முயற்சிப்பாள்.

பழக்கவழக்கம் அல்லது கற்றலினால் ஏற்படும் மாற்றங்கள்.

பழக்க வழக்கமானது

ஒரு பெண் கவர்ச்சியையும் இன்னொரு பெண் புகைப் படத் தொழிலையும் அடுத்த பெண் விஞ்ஞான ஆய்வுகளையும் விரும்புவார்கள். இவைகள் கற்றலினால் ஏற்படுவனவாகும்.

தற்காலிகக் கவர்ச்சி

நாம் வாங்கவேண்டும் என எதிர்பார்க்கும் பொருள் மறைந்துகிடந்தாலும் அவை எமது கவர்ச்சியினை ஏற்படுத்திக் காணச் செய்கின்றன ஒருவர் வேலைதேடித் திரியும்போது அவ் வேலைபற்றிய விளம்பரமானது மிகவும் சிறியதாக இருந்தாலும் அது அவரின் கவனத்தை ஈர்க்கச் செய்கின்றது.

தற்காலிக உளப் பிரகாரம்

ஒரு மனிதன் மிகவும் கோபமாக இருக்கும்போது அல்லது அவரின் குடும்பம் நோய்வாய்ப்பட்டிருக்கும்போது அவரது வேலையை திருப்திகரமாக செய்யமுடியாதிருப்பார்.

மேற்கூறப்பட்ட உதாரணங்களைக் கவனம் செலுத்தும்போது பிள்ளைகளும் இத்தன்மை கொண்டவர்களாகவே காணப்படுவார்கள். இத்தகைய காரணிகள் கற்றல் நிகழும்போது பாதிக்கப்படுவதை அவதானிக்க வேண்டும். இவற்றை நீங்கள் உங்கள் மனத்திலே கொள்வீர்களாயின் பிள்ளைகளை கற்றலில் ஊக்குவிப்பதற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**இளைப்பு**

உடல் வளமானது இளைப்பு ஒவ்வொரு உயிரினங்களிலும் காணப்படுகின்றன, அவர்களின் வேலை செய்யும் திறன் குறைந்து கொண்டு போகின்றன. இவற்றை நிவர்த்தி செய்வதற்காக ஆறுதல் மிகவும் அவசியம். இவ்விளைப்பானது மனிதரின் வினைத்திறனை மழுங்கடிக்கச் செய்கின்றது. கற்றல் நிகழும் போது இத்தகையறிவுகள் ஏற்படும் போது கற்றலானது எதிர்பார்ப்பதிலும் பார்க்க குறைவாகவே நடைபெறும்.

**இளைப்புக்குரிய காரணங்கள்**

மனிதனின் இரத்தத்திற் காணப்படுகின்ற சீனித் தன்மையானது அல்லது கிளைக்கோஜன் குறைடையும் போது மனிதன் மிகவும் இளைப்பு அடைவான். அல்லது அவன் மயக்கமடையும் நிலையை அடைவான். அதே போலத் தசை நார்களுக்கும் அதிகமாகவே வேலைகளை வழங்கும் போது மிகவும் இளைப்புத் தன்மை தோன்றலாம்.

- இரத்தத்தில் ரொக்சீன் உருவாகும் போது இளைப்பு உருவாகலாம்.
- பிராணவாயுக் குறைவினாலும் இளைப்புத் தோன்றலாம்.
- குறைவாக நித்திரை செய்தல், கூடிய வேலைகள் குறைந்தனவானதாக சத்துக்கள் என்பனவும் பிள்ளைகளைப் இளைப்பு ஏற்படுத்த முடியும்.

இளைப்பின் வகைகள்

பொதுவாக இளைப்பு வகைகள் பல்வேறு வகைப்பட்டன என்பதை அறிந்திருப்பீர்கள். அவை பின்வமாறு அமையும்.

- தசை நார் இளைப்பு
- புலனுணர்ச்சிக்குரிய இளைப்பு
- உள இளைப்பு

இந்த வகையான பிரிவுகள் செயற்கையானவை ஏனெனில் தசைநார்களானவை மத்திய நரம்புத் தொகுதியுடன் தொடர்புள்ளனவாகவுள்ளன. அதே போல உள இளைப்புகளும் தெடர்புடையனவாக உள்ளன. ஆகவே இவற்றையும் உள இளைப்பு என்றே கருத வேண்டும். எனவே நாம் உண்மையாக உள இளைப்புக்கும் விருப்பமற்ற வேலைகளைச் செய்யும் போது 'ஏற்படுகின்ற இளைப்புகளுக்கும் இடையே காணப்படும் வித்தியாசத்தை அறிதல் வேண்டும்.

( Mental Fatigue and Boredom )

(அலைவுள்ளம்) எனவே ஆசிரியர் உள இளைப்பையும் அலைவுள்ள இளைப்பினையும் பற்றி அறிந்திருத்தல் வேண்டும் ஒரு பிள்ளையானது கணித பாடத்தில் மிகவும் இளைப்பு ஏற்பட்டவராகக் காணப்பட்டால் அப்பிள்ளைக்கு கைப்பணிவேலையில் கூடுதலாக ஈடுபடச் செய்

தல் வேண்டும். அதேபோல் சமூகக்கல்வி வகுப்பிலே ஒரு பிள்ளை மிகவும் இளைத்துக் காணப்பட்டால் அப்பிள்ளைக்குச் சலனப்பட்டாலே அப்பாடத்தை நடத்தக் கூடியதாக ஆக்கிக் கொள்வதால் அவரின் இளைப்பினை போக்க முடியும்.

பாடசாலையில் ஏற்படும் இளைப்பு

உளவியலாளரான தோண்டைக் என்பவர் இளைப்பின் பற்றி பாடசாலையில் நடாத்திய ஆய்வின்படி பொதுவாக வேலையில் நடைபெறும் கற்றல் நிகழ்ச்சியானது காலை வேலையில் நடைபெறும் கற்றல் நிகழ்வுகளில் உள இளைப்புக் குறைவானதாக இருக்குமென்பதுபொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும் ஆயின் இவரின் ஆய்வின் பிரகாரம் மாலை வேலைகளில் இளைப்படைவது நடைபெறும் செய்ற்பாடுகளில் சில பொருத்தமான கற்பித்தல் முறைகளை பிழையான முறையில் அமைத்துக் கொள்வதாலேயே இவை ஏற்படுகின்றன எனக் கூறுகிருர். காலை வேலையிலே எல்லோரும் களைப்பற்றவராக இருப்பதால் கற்பித்தல் திருப்தியாக இல்லாவிட்டாலும் பிள்ளைகள் அவர்கள் களைப்படைவதில்லை உடல் களைப்புகள் மெதுவாக வந்து கொண்டிருக்கும்போது அவர்களுக்கு கற்றலில் ஊக்கலை ஏற்படுத்துவதற்கு, புதிய முறைகளைக் கைக்கொள்வராஞல் கற்றல் திருப்தியாக அமையும் அவரால் மிகவும் ஆணித்தரமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

இதுவரை கற்றதைச் சரியான மதிப்பீடுசெய்து பார்ப்பதற்கு செய்த பின்வரும் செவ்வைபார்த்தல் நான்கினைச் செய்துபார்க்கவும்.

## செவ்வைபார்த்தல் 4

பின்வரும் கோட்பாடுகள் சரியாயின் ( √ ) என்ற அடையாளத்தை அதற்கு எதிரேயுள்ள கூட்டின் இடுக.

i ஒரு மூன்றுமாதக்குழந்தையை ஊக்கற் தொழிற்பாடுகளின்மூலம் நடப்பதற்கு வழி வகுக்கமுடியும்

ii மித்திறன் வாய்ந்த பிள்ளையை மிகவும் சுலபமாக கற்றலில் ஊக்கப்படுத்த முடியும்.

iii சிறிய பிள்ளைகளின் மத்தியில் மிகவும் பருத்த உடல் கொண்ட பிள்ளைகளை எமது கவனத்தை ஈர்க்கச் செய்வான்.

iv மாலைவேளைகளில் கற்றலினுல் ஏற்படும் உள இளைப்பினைச் சிறந்த கற்பித்தல் முறைகளைக் கொண்டு அதை நீக்கமுடியும்.

v முதிர்ச்சி அடையும் முன்னர் கற்றல் நிகழ்வினை ஏற்படுத்தும் ஊக்கல் அளிப்பினும் பாடத்தில் அவன் விருப்பற்றவனுக இருப்பான்.

iv ரூசியாவில் ஒரு பிள்ளையின் அறிவை அளவிடுவதற்கு பல்வேறு வகையான நிலையில் நுண்மதி ஈர்வு முறையினைப் பயன்படுத்துகின்றார்கள்.

vii பிள்ளையின் வளர்ச்சியானது முதிர்ச்சியில் மாத்திரமே தங்கியுள்ளது.

viii ஒரு இளம் பெண்பிள்ளை நாகரீகத்தை விரும்புவது அவளின் பிறப்புரிமையிலிருந்தே ஆகும்.

ix கிளைக்கோஜன் என்றஇரத்தத்திற் காணப்படும் பகுதியின் குறைபாட்டினால் உடல் இளைப்பு உருவாகின்றது.

x தசை நார்களின் இளைப்பு உள இளைப்புல் செயற்கையானது காரணம் தசைநார்கள் மத்திய தசைநார்களோடு தொடர்புடையன.

உமது விடைகளுடன் இம் மொடியூலின் இறுதியில் தரப்பட்டுள்ள சரியான விடையுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்

இதுவரையும் இந்த மொடியூலில் கற்ற கருத்துக்கள் சுருக்கமாகப் பின்னே தரப்படுகின்றன.

## 7.00 சுருக்கம்

ஊக்கலைக் கற்பதற்கு பிள்ளைகளின் நடத்தை வகைகளை நாம் அறிந்திருக்க வேண்டும்.

ஊக்கல் என்பது உடல், உள்ளத்திற்கும் இடையே நடைபெறும் நிகழ்ச்சியாகும்.

ஊக்கிகள் ஊக்கல்களுக்கு செல்வாக்குச் செலுத்துகின்றது.

ஊக்கல் என்பது பிள்ளைகளிடம் காணப்படும் உள அறிவினை மலரச் செய்வதாகும்.

வெளியில் இருந்து வரும் ஊக்கல் திட்டங்கள் உள்ளகத்தில் உள்ளநுட்பங்களுக்கு உதவுகின்றது.

ஊக்கப்படுத்தும் நுட்பங்களிற் காணப்படுகின்ற சரியான அல்லது பிழையான நுட்பங்கள் ஆசிரியர் தெரிந்திருப்பதோடு அதை நிறைவேற்ற எந்த முறைகளில் நடைமுறைப்படுத்தலாம் என்பதையும் அறிந்திருக்க வேண்டும்.

ஊக்கல் என்பது உடல், உளத்தேவைகளுடனும் சமூகத்துடனும் உப கலாச்சாரப்பண்புகளுடனும் தொடர்புடையன.

ஒரு பிள்ளையைக் கற்றலில் ஊக்குதலை ஏற்படுத்த அப்பிள்ளையானது அது கற்றலுக்குரிய முதிர்ச்சியின் அடைதல் வேண்டும்.

மீத்திறன் வாய்ந்த பிள்ளையை மிகப் சுலபமாக கற்றலில் ஊக்கப்படுத்த முடியும்.

இதுவரை நீங்கள் கற்றதளை மதிப்பீடு செய்வதற்காக பின்வரும் பிற்சோதனையை சுயமதிப்பீடு செய்க.

## 8.0 பிற்சோதனை

மிகவும் பொருத்தமான விடையிற் √ என்ற அடையாளமிடுக.

1. ஊக்கல் பற்றி உளவியலாளர் கருதுவது

   i கற்பித்தலிற் கூடிய கவனமெடுத்தே கற்பித்தல்

   ii உட்தேவைகளை உருவாக்கி அல்லது ஆர்வத்தை உருவாக்கி பிள்ளைகளைக் கற்கத் துண்டுதல்

   iii பிள்ளைகளை பல்வேறு வகையான தொழிற்பாடுகளில் ஈடுபடுத்துதல்

   iv நடத்தையில் மாற்றத்தை உருவாக்குதல்

2. கற்றலை இடைநிறுத்தாது தொடர்ந்து கற்பதற்குச் சிறந்த வழி ஊக்கலேயாகும்

   i கற்சன் ii நெல்சன்

   iii மெலிலயன் iv அன்டெர்சன்

3. புகழ்ச்சியை கற்பித்தலுக்கு மிகவும் திறமான ஊக்கி நுட்பமாகக் கருதுவது ஏன்?

i பரம்பரை ஊக்கலைத்திருத்திப்படுத்துவது.

ii ஆசிரியர் ஒருவரே மாணவர்களைத் தூண்டக் கூடிய மிக முக்கியமானவராவார்.

iii பலவீனமான பிள்ளைகளை உற்சாகப்படுத்துவ தற்கு ஒரு முறையாகும்.

iv மாணவர்களின் சிந்தனைச் சக்தியைத் தூண் டக்கூடிய ஒன்றாகும்.

4. தண்டனை மூலம் ஊக்கத்தை அளிக்கும் நுட்ப முறையில் மிகவும் வெளிப்படையாகக் காணப் படும் குறைபாட்டிற்குக் காரணம்

i வெளிக் கொணர்வு நீண்டகாலமுடையதன்று

ii முன்னேற்றமடைந்துள்ள சரீகத்துக்கு அற்ற தன்று.

iii தண்டிப்பவர் பிள்ளைகள் குரோதம் கொள்வர்.

iv சட்ட ஒழுங்குகளின்படி ஆசிரியர் மாணவர் களைத் தண்டிக்க உரிமையில்லை.

5. மக்டூகளினால் முன்வைக்கப்பட்ட கொள்கையா னது பின்வருவனவற்றில் எதனை ஊக்கமளிப்ப தற்கு அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது.

| | |
|---|---|
| i ஆக்க ஊக்கம் | ii தன்னூக்கம் |
| iii ஆராய்வூக்கம் | iv தன்னிலைப்பாடு |

6. பொருத்தமான முதிர்ச்சியை அடைவதற்குப் பின் குழந்தைகட்கு முறைசார கல்வியை அறிமுகப் படுத்துவதால் ஏற்படும் முக்கியமான தகைமைகள்

i பிள்ளை கற்றலில் வெறுப்படையும்

ii பிள்ளையின் உடல் வளர்ச்சியைக் கட்டுப் படுத்தும்

iii மற்றப் பிள்ளைகளைவிட விரைவாகக் கற்பர்.

iv கற்கும் திறன்கள் இருந்த போதிலும் கற்றலை நிராகரிப்பர்.

உங்களது விடைகளை மொடியூலின் இறுதிலுள்ள விடைகளுடன் ஒப் பிட்டுப் பாருங்கள்.

இப்போது இம்மொடியூலைக் கற்று முடித்துள்ளீர்கள். இதனை நீங்கள் வெற்றிகரமாகக் கற்றுள்ளீர்களா என்பதைப் பரீட்சிக்க இதனைப் பற்றி சமர்ப்பிக்கவிருக்கும் ஒப்படைகள் உதவும். அத்தகைய ஒப்படைகள் கீழே உள்ளன. அவற்றுக்கு விடை எழுதித் தொலைக் கல்வி நிலையத்தில் கையளிக்கவும்.

## 9.0 ஒப்படை

(1) மக்டூகலின் இயல்பூக்கக் கொள்கையில் குறிப்பிடப்பட்ட இரண்டு இயல்பூக்கங்களைத் தெரிவு செய்து, கல்விச் செயற்பாடுகளில் மாணவர்களை ஊக்குவித்தலுக்கு, அவற்றைப் பயன்படுத்துமாற்றை கீழ்வரும் தலைப்புக்களில் விளக்குக.

1. இயல்பூக்கம்
2. செயன்முறையை அடையாளமிடல்
3. செயன்முறையின் நோக்கம்
4. செயன்முறையின் ஒழுங்கு

(11) கற்பித்தலின்போது மஸ்லோவின் தேவைக் கொள்கை பயன்படும் முறையை உதாரணமூலம் விளக்குக.

## 10.0 விடைகள்

முற்சோதனை

1. iv
2. ii
3. iii

செவ்வைபார்த்தல் – 1

| | |
|---|---|
| 01 – √ | 06 – × |
| 02 – × | 07 - √ |
| 03 – × | 08 - √ |
| 04 - √ | 09 - × |
| 05 - × | 10 – √ |

பெவ்வைபார்த்தல் - 2

| | |
|---|---|
| 1. குறைபாடுகளை | 6. ஒத்துழைப்பு |
| 2. நிறுத்துங்கள் | 7. பாடத்திட்டத்தின் |
| 3. துலங்கல் | 8. உயர் தாழ் |
| 4. இயற்கையாக | 9. அதிகரிக்கிறது குறைகிறது |
| 5. அதையிரியம் | 10. துண்டல் |

செவ்வைபார்த்தல் - 3

*1.* - ii

*2.* - ii

*3.* - i

*4.* - i

*5.* . iii

செவ்வைபார்த்தல் - 4

| | |
|---|---|
| i | — |
| ii | — |
| iii | — |
| iv | — |
| v | — |
| vi | — |
| vii | — |
| viii | — |
| i | — |
| | — |

பிற் சோதனை

| | | |
|---|---|---|
| *1* | — | iii |
| *2* | — | iv |
| *3* | — | iv |
| *4* | — | i |
| *5* | — | ii |
| *6* | — | iv |

## 11.0 மேலதிக வாசிப்பு

i கல்வி உளவியலும் அளவீடு — கலாநிதி எஸ். முத்துலிங்கம்

ii உளவியல் சுருக்கம் — உபாலி சேதற

iii கல்வி உளவியலும் பிள்ளைகளும் — கே. லொவல்

iv அவசிய கல்வி உளவியல் — எல். ஜி. கேவகே

v கல்வி, சமுதாயம், உளவியல் — சுகாதமுனி, ஞானசிறி

குறிப்பு

OFFSET BY THE PACIFIC PRESS (PVT) LTD.

ஆசிரியர் தொலைக் கல்விப் பாடநெறி